நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

மாற்றுவழியுண்டோ?



இன்னாளது வரையில் எல்லோரும் முக்கியதை
என்னாலே யாகுமென்று உளறுகிறாய் - சொன்னாக்கேள்
ஊற்றை அறியா தோடு நீரடக்க
மாற்று வழியுண்டேல் மறி!

ஈழமோகம்

இதழ் 30 16-30 செப்ரெம்பர் 1993 விலை 7/=

# வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டது வருந்தத்தக்கதே!

## யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராஜா

**தமிழ் மக்களின் போராட்டம் அரசு கூறுவது போல் பயங்கரவாதப் பிரச்சினையல்ல. அது தமிழ்மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதன் விளைவாக எழுந்த போராட்டமாகும். இனப்பிரச்சினை என்ற ஒன்று உண்டு என அரசு ஒப்புக்கொள்ளாதவரை பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது இயலாததாகும் என்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராஜா அவர்கள் நோர்வேயில் நடைபெற்ற 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அபிவிருத்தியும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

நோர்வே ரொரம்சோ பல்கலைக் கழகத்தின் உதவியுடன் யாழ் பல்கலைக்கழகத்தில் கடல் வளத்துறைப் பீடம் ஒன்றை உருவாக்குவதும், அது தொடர்பான நிபுணர்களைப் பரிமாறிக் கொள்வதும் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்காக நோர்வேக்கு சென்றிருந்தார் துணைவேந்தர் அவர்கள்.

ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் அவர் நிகழ்த்திய உரையின் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் அரசு கூறுவது போல் பயங்கரவாதப் பிரச்சினையல்ல. அது தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதன் விளைவாக எழுந்த போராட்டமாகும். தனிச்சிங்களச் சட்டம், திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் பறிப்பு போன்றவற்றாலும், இனக்குரோத நடவடிக்கைகளாலும் வளர்த்தெடுக்கப்பட்ட இப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல் ஒன்றின் மூலம் சுமுகமான தீர்வு காண பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டன.

தமிழ்மக்களின் அப்போதைய தலைமைகளுக்கும் அரசுக்குமிடையில் உருவாக்கப்பட்ட அந்த ஒப்பந்தங்கள் யாவுமே நடைமுறைப்படுத்தப்படாமல் பேரினவாதத்தால் தோல்விக்கு இட்டுச் செல்லப்பட்டன. தமிழ் மக்கள் சாத்வீகமானவர்கள். இவற்றை எதிர்த்து சாத்வீக வழிப் போராட்டங்கள் நடாத்திய போது அவர்களுக்கு பலாத்காரமே பதிலாகக் கிடைத்தது. 1980 ஆம் ஆண்டளவில் தமிழ்மக்களின் சொத்தான கல்வியில் மொழிவாரித் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகத்திற்குப் புகும் தமிழ் மாணவர்களின் தொகை கட்டுப்படுத்தப்பட்ட போது தான் கொதிப்படைந்த தமிழ் மாணவர்கள் பலர் ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர்.

அதனைத் தொடர்ந்து 1983 இனக்கலவரம் தமிழ் மக்களை அகதிகளாக்கிய போது அரசு கப்பல் மூலம் வடக்கு கிழக்கிற்கே அனுப்பியது. இதனூடாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான பிரதேசம் என்றும், அது அவர்களது பாரம்பரியப் பிரதேசம் என்றும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

1983ம் ஆண்டின் ஜூலை இனப்படுகொலையே தமிழ்மக்களை ஆயுதப் போராட்டத்தினை அங்கீகரிக்க வைத்தது. அதுவரை அவர்கள் சாத்வீகப் போராட்டங்களிலும், பேச்சுவார்த்தைகளிலும் சுமுகமான தீர்வுகளிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

> வடக்கில் மனிதஉரிமைகள் பற்றி புள்ளிவிபரம் எடுக்கும் வெளிநாட்டு நிறுவனமும் தமிழ் மக்களின் தலைகளின் மேல் குண்டு பொழிவதைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. இதன் மூலம் மனித உரிமை மீறல்கள் இல்லையென நான் குறிப்பிடவில்லை. இவர்கள் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு யுத்தம் பற்றி எதுவுமே பேசிக் கொள்ளாததன் மூலம் ஏதோ ஒருவகையில் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள்.

இப்போது அரசானது இப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை எனக்கூறுவதன் மூலம் முழுத்தமிழ் மக்களையும் தனது எதிரியாகக் கருதுகிறது. இப்பிரச்சினை அரசு கூறுவது போல் பயங்கரவாதப் பிரச்சினை எனில் தமிழ் மக்களை தன்பக்கம் ஈர்ப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கான பொருளாதாரத் தடைமூலம் அடிப்படை வசதிகள் யாவற்றையும் துண்டறுத்து அவர்களது வெறுப்பையே சம்பாதிக்கினறது. அவர்களை மேலும் மேலும் போராட்டத்தின் பால் தள்ளுகிறது. விமானங்கள் மூலம் குண்டுவீசி அவர்களைக் கொல்கின்றது. இனப்பிரச்சினை என்ற ஒன்று உண்டு என அரசு ஒப்புக்கொள்ளாதவரை பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இயலாததாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச சமூகத்தின் தலையீட்டினாலும், அவர்களின் மேற்பார்வையின் கீழுமே சமஸ்டி முறையிலான தீர்வுகள் அமுலாக்கப்பட முடியும் என்பது எனது பிரத்தியேக கருத்தாகும் எனவும் அவர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

மேற்குலக நாடுகளின் உதவி பற்றிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் 'இலங்கை கேட்டுக் கொள்ளும் அளவுக்கு மேலாக வழங்கும் கடனுதவிகளும், அபிவிருத்திக்கான உதவிகளுமே தமிழ் மக்களின் மேல் விமானக் குண்டுகளைப் பொழிவதற்கு அரசினால் பயன்படுத்தப்படுகிறது எனக்குறிப்பிட்ட அவர் இவ்வுதவிகளை மறுப்பதன் மூலமோ அல்லது குறைப்பதன் மூலமோ, அரசின் இந்நடவடிக்கைகளுக்கு துணை போகாதிருக்கும்படியும் மேற்கு நாடுகளைக் கேட்டுக் கொண்டார்.

நான் ஒரு தமிழன். ஒரு தேசியவாதி என்ற அடிப்படையிலேயே பல்வேறு இக்கட்டுகளுக்குமிடையில் ஆபத்தான சூழலில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகக் கடமையாற்ற வேண்டியிருக்கிறது. இரு எஜமான்களுக்கிடையில் நான் பணியாற்ற வேண்டியுள்ளது. அதற்காக நான் எனது தேசியத் தன்மையை, எனது மக்களின போராட்டத்துக்கான நியாயத்தன்மையை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை.

வடக்கில் மனிதஉரிமைகள் பற்றிப் புள்ளிவபரய எடுகசும வெளிநாட்டு நிறுவனமும் தமிழ் மக்களின் தலைகளின் மேல் குண்டுபொழிவதைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. இதன் மூலம் மனித உரிமை மீறல்கள் இல்லையென நான் குறிப்பிடவில்லை. இவர்கள் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு யுத்தம் பற்றி எதுவுமே பேசிக் கொள்ளாததன் மூலம் ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள். ஒரு கிராமத்தின் மீது மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட குண்டு பொழியும் சம்பவங்களைப் பற்றியோ, போஷாக்கின்மையால் இறக்கும் குழந்தைகள் பற்றியோ உலகுக்குச் சொல்ல மறுக்கிறார்கள்.

வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டது வருந்தத்தக்கது. அதேவேளை கிழக்கில் தமிழ் மக்கள் மீதான முஸ்லீம்களின் தாக்குதலும் வருத்தத்திற்குரியது எனவும் அவர் குறிப்பிட்டார்.

'மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்' என்ற ஒன்று யாழ் பல்கலைக்கழகத்தில் இல்லை என்ற அவரது அறிக்கை சம்பந்தமான கேள்வியொன்றுக்கு 'அவர் அது உருவாக்கப்பட்ட போது நானும் அதில் அங்கத்தவனாக இருந்தேன். ஆனால். அதிலிருந்து பலரின் வெளியேற்றத்தினையடுத்து நடைமுறையில் அது யாழ் பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்குவதில்லை. கொழும்பிலோ அல்லது வேறெங்குமோ அது இருக்கலாம். ஆனால் யாழ் பல்கலைக்கழகத்தில் அது இயங்குவதில்லை' எனப் பதிலளித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் பலரின் கைது சம்பந்தமான கேள்வியொன்றுக்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார். '' யாராவது மாணவர் கைது செய்யப்பட்டால் அம்மாணவனின் பெற்றொரின் தகவல் அடிப்படையில் நாம் உரியவர்களுடன் தொடர்பு கொள்வோம். இவ்வாறு தொடர்புகளினடிப்படையில் சிலர் சில நாட்கள் விசாரணையின் பின்போ, அல்லது அவர்கள் மீதான குற்ற அடிப்படையில் மேலும் தாமதமாகவோ விடுவிக்கப்பட்டுள்ளனர். செல்வி, மனோகரன் போன்றோரை விடுவிப்பதில் நாங்கள் மேற்கொண்ட முயற்சி பயனற்றுப் போய்விட்டது. அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் வேறாக உள்ளன. அவர்களுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக்குமான தொடர்பு பற்றிய சந்தேகம், அவர்களின் கைது பற்றிய பரபரப்பான செய்திகள் பரவியமை போன்றவை அவர்களை விடுவிப்பதைக் கடினமாக்கியுள்ளது என்று தெரிவித்தார்.


> ரொரம்சோ என்பது நோர்வேயின் அதிவடக்கேயுள்ள - உலகின் அதிவடக்கேயுள்ள ஒரு நகரமாகும். ஐம்பதாயிரம் நோர்வேஜியர்கள் வதியும் இந்நகரில் நோர்வேயின் நான்கு பல்கலைக் கழகங்களில் ஒன்றான ரொரம்சோ பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. பதினைந்துக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் இங்கு கல்வி பயில்கிறார்கள். எல்லாமாக 35 தமிழர்கள் இங்குள்ளனர். வசந்தகாலமான ஆனி முதல் ஆவணி வரையான இரண்டரை மாதப்பகுதி 24 மணிநேரமும் பகலாகும். 'நள்ளிரவுச் சூரியனை' இக்காலப்பகுதியில் காணலாம். பனியுறை காலமான ஆண்டின் இறுதி நவம்பர், டிசெம்பர் மாதங்களில் 24 மணிநேரமும் இரவாகும். சூரியன் இன்றிய நாட்கள் இவை.

நோர்வேயிலிருந்து
சிறப்பு நிருபர்
அருவல்

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரசேகரன்: உறுப்பினர் பதவியை திட்டமிட்டுப் பறித்தனரோ?



மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் மாகாண சபையில் பதவிப் பிரமாணம் செய்வதற்கான கால எல்லை செப்ரெம்பர் பத்தாம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. ஆனால் பத்தாம் திகதிவரை பதவிப்பிரமாணம் செய்ய அரசு அனுமதிக்கவில்லை.

ஏற்கனவே, ஒகஸ்ட் 17ம் திகதி சந்திரசேகரன் பதவிப் பிரமாணம் எடுக்கவும், அன்றைய கூட்டத்தில் பங்குபற்றவும் வழங்கப்பட்ட அனுமதி இரகசியப் பொலிஸாரின் அறிக்கையைத் தொடர்ந்து ரத்துச் செய்யப்பட்டது.

சந்திரசேகரனை கண்டியில் பதவிப்பிரமாணம் செய்ய அனுமதிப்பது அப் பகுதியின் அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதோடு பதற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கண்டிக்கு அழைத்துச் செல்லுகையில் சந்திரசேகரனது உயிருக்கும், அவரை அழைத்துச் செல்லும் பொலிஸாரின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்றும் 'பூச்சாண்டி' காட்டி சந்திரசேகரன் பதவிப் பிரமாணம் செய்வது தடை செய்யப்பட்டது தெரிந்ததே.

கண்டி மாகாண சபைக்கு கடந்த மே மாதம் தெரிவு செய்யப்பட்ட சந்திரசேகரன் அவர்கள் கடந்த இரண்டு வருட காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான வரதனுக்குப் புகலிடம் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் இவர். இவருடன் சேர்ந்து அம் முன்னணியின் செயலாளர் அப்துல் பாவா காதர், உப தலைவர் வி.ரி. தர்மலிங்கம், அமைப்பாளர் இரா. இராஜாராம், ஆசிரியர் இரா.இராமகிருஷ்ணன் ஆகியோரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

மலையக மக்கள் முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்ட காலத்தில், அவர்கள் தாம் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து 'அடிப்படை மனித உரிமை மீறல்' வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் ''அவர்களைக் கைது செய்ததும் தடுத்து வைத்திருப்பதும் சட்டவிரோதம்'' என்று 4.5.92 இல் தீர்ப்பு வழங்கியது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிந்த அரசாங்கம், உடனடியாக அவர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்ததுடன் இதுவரை வழக்கை விசாரித்து முடிக்காமல் காலதாமதப்படுத்தி வருகிறது.

சிறையில் இருந்து கொண்டே மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தலைவர் திரு.பெ.சந்திரசேகரனை பிணையில் விடவேண்டுமென பல அரசியல் ஸ்தாபனங்களும் - மத்திய மாகாண சபையின் பல உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவரின் வழக்கை நடத்தும் சட்டத்தரணி அவரை பிணையில் விடும்படி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்த போது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவு நீக்கப்பட்டால் அவரை பிணையில்விட தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கூறியுள்ளார்.

இதேவேளை இவரின் வழக்கை விசாரிக்கும் நீதிபதி ''மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரை சிறையில் தடுத்து வைத்திருப்பது சட்டவிரோதமானது'' என அரச தரப்பினருக்கு தெளிவு படுத்தியுள்ளார்.

பயங்கரவாதச் சட்டங்கள், ''தேசிய பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதியை நிலை நாட்டுவதற்கு அல்லது அத்தியாவசிய சேவைகள் நடத்துவதற்கு - பாதகமான செயல்கள் செய்வதிலிருந்து தடுப்பதற்காக பயன்படுத்தப்படலாம் - '' என சட்டவிதிகள் கூறுகின்றன.

ஆகவே அரசாங்கம் சந்திரசேகரன் அவர்களை பிணையில் விட்டால் மேற்கூறிய சட்டவிதிகளுக்கு எதிராக எவ்விதமான பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை தெளிவு படுத்தவேண்டும்.

முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த போதும், அவர்களின் கட்சி தொடர்ந்தும் சட்டபூர்வ வழிகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலிலும் மலையகத் தமிழ்மக்கள் மத்தியில் இரண்டாவது சக்தியாக இனம் காணப்பட்டுள்ளது.

தடுப்புக்காவலில் இருந்து கொண்டே அவரை சத்தியப்பிரமாணம் செய்யவும் மாகாணசபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், அரசினால் ஏற்பாடு செய்து கொடுக்க முடியுமாயின், அவரை பிணையில் விடுவதில் என்ன சிக்கல் இருக்கிறது என்பது அரசுக்குத் தான் வெளிச்சம்.

தடுப்புக் காவலில் இருக்கும் போது, மாகாணசபைக் கூட்டங்களில் மட்டும் கலந்து கொள்வதின் மூலம் எந்தளவுக்கு சுதந்திரமாகவும், முழுமையாகவும், தமக்கு வாக்களித்த மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்பது வெளிப்படையானது.

இதேவேளை அம்முன்னணியின் செயலாளரான திரு.அப்துல் பாவா காதர் அவர்களின் வழக்கை விசாரிக்கும் நீதிபதி விக்னேஸ்வரன் அவர்கள், ''இது ஒரு அரசியல் வழக்கு என்பதால் அரசு தரப்பினர் வழக்கை தாமதித்து நீடித்துக் கொள்ள முயல்வது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது'' எனக் கூறியுள்ளார்.

சந்திரசேகரனையும், அவருடன் கூடக் கைது செய்யப்பட்டவர்களையும் பிணையில் விடுவது தொடர்பாக அரசு காட்டி வரும் அசிரத்தையும், சந்திரசேகரனைப் பதவிப் பிரமாணம் செய்யவிடாமல் வழங்கப்பட்ட அனுமதியை ரத்துச் செய்ததுமாக தொடர்கின்ற இந்நடவடிக்கைகளும் அரசின் இது தொடர்பான அறிக்கைகள் குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்துவனவாயுள்ளன.

ஜனநாயக ரீதியில் தமது உரிமைகளைப் பெறுவதற்கும், தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் தமது வாக்குகளை அம் முன்னணிக்கு அளித்த மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய ஒரு கடமை அத்தலைவருக்கு இருக்கிறது என்பதையும் அரசாங்கம் உணர்ந்து அவரை சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பது அவசிய மாகும்.

- இரா.திருச்செந்தூரன்

# இந்துமதவெறியும் ரவிவர்மாவும்



19ம் நூற்றாண்டு இந்திய ஓவியரான ஓவியர் ரவிவர்மாவை முதன்மைப்படுத்தும் செயற்பாடுகளை இந்திய அரசாங்கம் இப்போது என்றுமில்லாதவாறு முடுக்கியிருக்கிறது. ரவிவர்மாவை இந்தியாவின் நவீன ஓவியப்போக்கின் முன்னோடியாக அதிகாரபூர்வமாக ஸ்தாபிக்கும் அரசினது இந்நடவடிக்கையை முன்னணி இந்திய ஓவியர்கள் பலர் எதிர்த்துவருகின்றனர்.

யார் இந்த ரவிவர்மா? 19ம் நூற்றாண்டு ஓவியரான இவர் இந்து புராணீகக் கதைகளை தனது கருவாகக் கொண்டு ஓவியம் வரைந்தவர்.

ரவிவர்மாவின் 'மேதைத்தனத்தின்' மீதான விமர்சனம் கலாயோகி ஆனந்தக் குமாரசாமியால் 1907ம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்திய ஓவிய வரலாற்றில் ரவிவர்மாவுக்கும் ஒரு பாத்திரம் உண்டெனினும் கலையாக்கத் தன்மை இன்மையும் இந்தியத்தனம் இன்மையும் இவரது ஓவியத்தவறுகள் என ஆனந்தக் குமாரசாமி குறிப்பிட்டிருந்தார்.

அரசினது அண்மைய நடவடிக்கையை எதிர்த்து வரும் முன்னணி ஓவியர்களில் ஒருவரான எம்.எப். ஹுசைன் ரவிவர்மாவை முதன்மைப்படுத்தும் அரசினது நடவடிக்கை ஓர் அரசியல் பின்னணியைக் கொண்டிருப்பதாகவும், பாரதிய ஜனதாக் கட்சி இந்திய அரசைக் கைப்பற்றுமானால் ரவிவர்மா இந்தியாவின் தேசிய ஓவியராக அறிவிக்கப்பட்டாலும் அதிசயப்படுவதற்கில்லை என்றும் குறிப்பிடுகிறார். ஐரோப்பிய ஓவியங்களினது வலுவான தாக்கம் இவரது ஓவியங்களில் அப்பட்டமாக இருக்கிறது என்று குறிப்பிடுகிற எம்.எப். ஹுசைன் இவரது 'சரஸ்வதி' 'துர்க்கா' ஆகிய மிகப் பிரபல்யமான ஓவியங்களில் இத்தாலியப் பெண்கள் சேலை கட்டினால் எப்படி இருப்பார்களோ அவ்வாறே வரையப்பட்டிருக்கின்றன என உதாரணம் காட்டுகிறார். அதாவது ரவிவர்மா ஓர் தனித்துவமான படைப்பாற்றல் வாய்ந்த கலைஞர் அல்ல ஓர் பிரதிபண்ணும் (imitating) கலைஞரே.

ரவிவர்மாவுக்கு ஓவியம் என்பது ஒரு கலைப்படைப்புத் தொழிலல்ல என்றும், அவரைப் பொறுத்தவரையில் அவை ஒரு விவரணமே எனக் கூறி ஓவியங்களில் அலங்கார உடைகள், ஆபரணங்கள் என்பவற்றுக்கு அவர் கொடுத்து வந்த முக்கிய கவனத்தை காட்டுகிறார் இன்னொரு ஓவியர்.

அரசியலில் இன்று இந்துமதவெறி புகுந்துவிளையாடுவதுபோல் கலைகளிலும் தொடர்கிறது என்பதினையே இது காட்டுகிறது. குறுகிய அரசியல் நலன்கள் கலைகளையும் பலிக்கடாவாக்குகிறது.

தகவல் : இலஸ்ரேட் வீக்லி ஒப் இந்தியா.

- ந. செவ்விந்தியன்

# பெண்ணடிமை; ஒரு தனிப்பட்ட பிரச்சினையல்ல...

சில மாதங்களுக்கு முன்னர் முற்போக்குவாதிகள், சமாதான விரும்பிகள் மற்றும் இடதுசாரிகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டம் ஒன்றிற்கு கனடா சென்றிருந்தேன். அக் கூட்டம் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவரும் வகையில் இலங்கைக்கு வெளியில் வாழும் இலங்கையர்கள் என்ன செய்யலாம் என்பதை ஆராயும் நோக்குடன் நடாத்தப்பட்டது. வடஅமெரிக்கா, ஐரோப்பா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய சில பெண்களே இதில் கலந்து கொண்டனர். இவ்வாறு கலந்து கொண்ட பெண்களில் ஒருத்தி என்ற வகையில் எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கூட்டத்தில் பேசுமாறு ஒரு பெண் கூட அழைக்கப்பட்டிருக்கவில்லை. ''அன்னையர் முன்னணி '' போன்ற பெண்கள் அமைப்புக்களே சமாதானத்தை ஏற்படுத்துமுகமாக ஆரம்பிக்கப்பட்ட பெரும் வெகுஜன அமைப்புக்களாக இருந்த போதும் அவர்களது அனுபவங்களை அறிந்து, பகிர்ந்து கொள்ளாமை ஒரு பெரும் குறைபாடே.

கூட்டத்தின் போது பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் எதுவும் எழுப்பப்படவில்லை. அதை நாம் எழுப்பிய போதும் கூட ''இது சமாதானத்திற்கான கூட்டமா அல்லது பெண்கள் பிரச்சினை பற்றிய மாநாடா?'' என கூட்ட முக்கியஸ்தர் ஒருவர் கேட்டது ஆச்சரியமாக இருந்தது.

தாங்கள் இடதுசாரிகள், முற்போக்காளர்கள் எனக் கூறிக் கொள்ளும் ஆண்கள் இன்றும் கூட சமாதானம், பெண்ணடித்தனம் ஆகிய அம்சங்களைப் பிரித்து நோக்குவது வருந்தக் கூடிய அம்சமே. ஆணாதிக்க சமுதாயங்களில் ''பெண்கள் பிரச்சினை'' இரண்டாந்தர இடத்தை (வர்க்க முரண்பாடு அல்லது இனமுரண்பாடு முதலிடத்தையும் ) வகிக்கும் வரை பெண்கள் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டவண்ணமே இருப்பர். சனத்தொகையில் 50% ஆன பெண்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் மேற் கொள்ளப்படும் எந்த முயற்சியும் வெற்றியளிக்காது என்பது இன்றைய அரசியலின் முக்கியமான அரிச்சுவடியாகும்.

கூட்ட ஒழுங்குகள் கூட பெண்கள் கலந்து கொள்வதை ஊக்குவிப்பதாக அமையவில்லை. கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் பிள்ளை பராமரிப்பிற்கான வசதிகள் எதுவும் செய்திருக்கவில்லை. பிள்ளைகள் பராமரித்துக் கொள்ளும் பொறுப்பு பெண்கள் தலைமீது இருக்கும் எமது சமுதாயங்களில் பிள்ளை பராமரிப்பிற்கான வசதிகள் செய்யப்படாதவிடத்து பெண்கள் பங்குபற்றல் மிகக் குறைவாகவே அமையும், என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

''நாங்கள் பெண்களைச் சமமாகவே எண்ணுகிறோம்'' என்று மட்டும் கூறிவிட்டால் பெண்கள் விடுதலையடைந்து விடப்போவதில்லை. ஆணாதிக்க சமுதாயத்தில் வாழும் நாங்கள் பெண்கள் தமது பங்களிப்பை அரசியலில் வழங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கூட்டத்தின் போது, அங்கிருந்த பெண்கள் பெண்களது சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்திய போது அதனை ஆண்கள் ஏளனமாகவே விமர்சித்தார்கள். சுய நிர்ணய உரிமை என்றால் ''பிரிந்து போகும் உரிமை'' என்ற குறுகிய வியாக்கியானத்தாலோ என்னவோ அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையின் அர்த்தம் விளங்கவில்லை. சிலர் கூறியதாவது ''சுயநிர்ணய உரிமை ஒரு அரசியல் கோட்பாடு/உரிமை. அது எப்படி பெண்கள் பிரச்சனைக்கு பொருந்தும்?'' பெண்ணடித்தனம் தனிப்பட்ட பிரச்சினையல்ல, அது ஒரு அரசியல் பிரச்சினை (Personal is political) என்பதினை ஏற்றுக் கொள்ளும் அளவில் எமது பெரும்பான்மையான ஆண்கள் இல்லை என்பதினைக் கனடாக்கூட்டமும் நிறுவியிருக்கிறது. பெண்கள் விடுதலை, பெண்நிலை வாதம் பற்றி ஒரு உணர்திறன் வழங்கும் கூட்டத்தொடரை இவ்வகையான ஆண்களுக்கு ஒழுங்கு செய்ய வேண்டியது மிக அவசியம் !

பாஞ்சாலி

சரிநிகர்
18/2, அலோசாலை
கொழும்பு -03
தொலைபேசி :576704

பிரதம ஆசிரியர் உ சேரன்

# மூன்றாம ஆள்!

கடநத வாரங்களில் ஒப்பந்தங்கள் பறறிய பலவகைப்பட்ட கதையாடல்களும் 'கதை'களும் காற்றோடு வந்து போயின.

கூட்டா சிமுறைக்கு விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்ற தொண்டமான் கதை ஒருபுறம்; அதற்கான திலகரின் மறுப்பு மறுபுறம். பூநகரி-சங்குப்பிட்டியூடாக யாழ்ப்பாணப் பாதையை திறந்து விடுவது பற்றி அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையாளருக்கும் (UNHCR) இடையேயான ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக உபாலி நிறுவனப் பத்திரிகைகளும் ஒரு பெரிய பொய்யை அவிழ்த்து விட்டிருந்தன . இத்தகைய ஒப்பந்தம் எதுவும் இடம் பெறவில்லை என்று பல வாரங்களுக்கு முன்பே எல்லோருக்கும் தெரிந்திருந்தது என்பது மட்டுமல்லாமல் ஐ.நா. உயர் ஆணையாளரும் ஒப்பந்தம் எதுவும் இடம், பெறுவதற்கான சாத்தியம் எதுவுமில்லை என்று அறிக்கை விட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில் உபாலி நிறுவனப் பத்திரிகைகள் கிளப்பிவிட்ட ''கட்டுக்கதை'' அரசினதும், வேறு சில சக்திகளினதும் தூண்டலால் இடம்பெற்றிருக்கிறது என எண்ணத் தோன்றுகிறது. விடுதலைப் புலிகளுடன் எவ்வகையான ஒப்பந்தத்திற்கும் போவதில்லை என்று அரசு பகிரங்கமாகவே அறிக்கை விடுவதற்கும் ஒப்பந்தத்திலிருந்து பின் வாங்குவதற்கும் எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்துவதிலிருந்து தப்பிக்கவும் இந்தச் சந்தர்ப்பத்தை அரசு தந்திரமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. பூநகரி-சங்குப்பிட்டிப் பாதை தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தத்தின் முதல்வரைவு ஒன்று ஐ.நா.உயர் ஆணையாளரால் தயாரிக்கப்பட்டு விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் ஏற்கனவே தரப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் முதல் வரைவுடன் இலங்கை அரசு தன்னுடைய பூரண உடன்பாட்டைத் தெரிவித்திருந்தது என்றும் விடுதலைப் புலிகள் முதல் வரைவை நிராகரித்து விட்டார்கள் என்றும் ஐ.நா.உயர் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து நம்பகமாகத் தெரிய வருகிறது. ஒப்பந்தத்தை வாசிக்கும் எவருக்கும் மிகத் தெளிவாகத் தெரியும் முக்கியமான அம்சம் ஒன்றுண்டு

பொதுமக்களின் நலன், வசதிகளுக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்கப்படாமல் போரிலீடுபட்டுள்ள இருதரப்பும் தங்களுடைய நலன்களைப் பேணவே ஒப்பந்தம் வழி சமைத்துவிட்டிருக்கும் என்பதே அது. ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அது ஆயிரக்கணக்கான மக்களைக் கிளாலி மரணப் பொறியில் இருந்து பாதுகாத்திருக்கும் என்பது உண்மைதான். எனினும் முக்கியமான அம்சம் அதுவல்ல.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே எவ்வகையான நேரடி இணக்கமும் ஒரு மூன்றாவது ஆளின் இடையீடு இன்றி ஏற்படமுடியாது என்ற யதார்த்தமே ஐ.நா.உயர் ஆணையாளர் முக்கியமாகச் சம்பந்தப்பட்டதிலிருந்து முக்கியமாகத் தெரிய வருகிறது.

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நீடித்த முரண்பாடுகள் பலவற்றுக்கு ''மூன்றாம் ஆள்'' மூலமே இணக்கப்பாடும் அந்த இணக்கப்பாட்டின் நடைமுறையாக்கமும் நிகழ்ந்துள்ளன என்பது உண்மை. எலசல்வடோர், கம்போடியா ஆகிய உதாரணங்களுடன் இப்போது நோர்வே தலையீட்டுடன் இஸ்ரேல் - பலஸ்தீன இடைக்கால உடன்பாட்டைச் சுட்டிக் காட்டலாம். இங்கும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா.உயர் ஆணையாளர் என்று மெல்ல மெல்ல சர்வதேச மூன்றாம் ஆள் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வந்தாயிற்று.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்த மூன்றாம் ஆளுடனான இணக்கப்பாடு வெற்றியளிக்கும் என்பது நிச்சயமல்ல. இணக்கப்பாட்டின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பல காரணங்கள் தொடர்புபட்டிருக்கலாம்.

எனினும் மிகவும் அடிப்படையான அம்சம் என்னவெனில் நீடித்த முரண்பாடுகளும், சம்பந்தப்பட்ட இருதரப்பும் ஒரு காலமுமே நேரடிப் பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு காணமுடியா நிலையும் பலஸ்தீனத்தைப் போலவே இலங்கைப் பிரச்சினைக்கும் பொதுவானது.

இந்நிலையில் மூன்றாம் ஆளின் இடையீடு தவிர்க்க இயலாதது.

ஐ.நா.என்றவுடன் ஐ.நா.படைகள் என்று ஒருவரும் குழம்பத் தேவையில்லை. ஐ.நா.சபையின் பன்முகப்பட்ட தொழிற்பாடுகளில் ஐ.நா.சபையின் பாதுகாப்புச் சபையுடன் தொடர்புற்ற பல இணக்கப்பாட்டுத் தொழில்முறைகள் உள்ளன. என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்சல்வடோருக்கு ஐ.நா.படைகள் அனுப்பவில்லை. ஐ.நா. செயலாளர் நாயகத்தின் ஒரேயொரு தூதுவரே மூன்றாம் ஆளாகத் தொழிற்பட்டார். இஸ்ரேலுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் நின்றவர் நோர்வே அரசு சார்பில் அதனுடைய வெளியுறவுத்துறை அமைச்சர்.

இலங்கைப் பிரச்சினையில் நீண்டகாலமாகவே இணக்கப்பாட்டுக்கு முயன்று வந்தவர்கள் நோர்வேஜியர்கள் தான். பலஸ்தீனத்துக்கு அடுத்தபடியாக அவர்கள் தங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்த இருப்பது இலங்கையில்தான். இதுபற்றிய பூர்வாங்க ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கின்றன என்று தெரிய வருகிறது.

மூன்றாம் ஆளுடாகவும்

இணக்கப்பாடு சாத்தியமில்லையென்றால் மிஞ்சப் போவது ஒருமைப்



# அரபாத் அமைதிப் பொறிக்குள் அகப்பட்டாரா?

பலஸ்தீனிய விடுதலை இயகக்த் தலைவர் யசீர் அரபாத்தும், இஸ்ரேலியப் பிரதமர் ராபினும் மத்திகிழக்கு சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக வாஷிங்டன் புறப்படுகின்றனர் என்ற செய்தியுடன் இன்று காலை விடிகிறது.

இன்று இரவு எட்டு மணியளவில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட இருப்பதாகவும், இதற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதற்கென்றே பயன்படுத்தப்படும் வட்டமேசை களஞ்சிய அறையிலிருந்து தூசி துடைக்கப்பட்டு வெளியே கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கத் தொடர்புசாதனங்களை ஆதாரங் காட்டி அச்செய்தி மேலும் தொடர்கிறது.

அமெரிக்க ஆசியுடனும், நோர்வேஜிய ஒத்துழைப்புடனும் கடந்த சில மாதமாக இரகசியமாக நடைபெற்று வந்த இந்தப் பேச்சுவார்த்தையில் மூன்று முக்கியமான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1967 இல் இஸ்ரேல் கைப்பற்றிய காஸாப் பள்ளத்தாக்கு, மேற்குக் கரை, ஜெரிக்கோ நகரம் போன்ற பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் விலகும், இப்பகுதிகளுக்கான நிர்வாகம், பொலிஸ் என்பன பலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்படும், ஐந்து வருடகாலத்துத்துள் நிலவும் சமாதான நிலமையைக் கருத்திற் கொண்டு முழுமையான (பாதுகாப்பு உட்பட) சுயாட்சி வழங்கப்படும் என்பன எட்டப்பட்ட உடன்பாடுகளாகும்.

1948இல் ஐ.நா.சபையின் அங்கீகாரத்துடன் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து பலஸ்தீனியர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையில் ஆரம்பமான யுத்தம், 1967 இல் காஸாப் பள்ளத்தாக்கு, மேற்குக் கரையோரப் பிரதேசங்கள் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டு லட்சக்கணக்கான பலஸ்தீனியர்கள் அப்பிரதேசங்களிலிருந்து அகதிகளாக விரட்டப்பட்டதோடு உக்கிரமடைந்தது. கடந்த நான்கு தசாப்தங்களிலும் பேச்சுவார்த்தைக்கான பல்வேறு முயற்சிகள் நடைபெற்றனவாயினும் உடன்பாடு எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை.

ஆனால் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்துக்கும், இஸ்ரேலுக்குமிடையே இறுதியாக நடந்த பேச்சுவார்த்தையில் இப்பிரச்சினைக்கான உடன்பாடு காணப்பட்டுள்ளதாக இருதரப்பினரும் அறிவித்துள்ளனர்.

'சுதந்திரமான பலஸ்தீன அரசை நோக்கிய முதலாவது நடவடிக்கை இது' என பலஸ்தீன இயக்கத் தலைவர் அரபாத் கருத்து வெளியிட்டதிலிருந்து கடந்த நான்கு தசாப்தகால உக்கிரமான மோதல், பலஸ்தீன மக்களின் அழிவு, அகதி வாழ்வு ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என அரபாத் நம்புவதாகத் தெரிகிறது. அரபாத்தின் நம்பிக்கையை வலுப்படுத்துகிறாற் போல் 'இந்த -உடன்படிக்கை ஒரு புதிய யுகத்தின் ஆரம்பம்' என்கிறார் நோர்வேஜீய வெளியுறவு அமைச்



ஆனால், பலஸ்தீனர்களுக்கெதிராக இஸ்ரேல் நடாத்திய ஒடுக்குமுறையை வெளிப்படையாகவே தட்டிக் கொடுத்து வந்த அமெரிக்க அரசு 'மத்திய கிழக்கு' சமாதானம் பற்றிப் பேசுவது சில பலஸ்தீனக் குழுக்களுக்கும், அரபு நாடுகளுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அங்கத்துவம் வகிக்கும், அரபாத்தின் அல்பற்றாவுக்கு ஓரளவுக்காவது சமமான பலத்தைக் கொண்டுள்ள இடதுசாரி அமைப்பான பி.எல்.எப்.பி இவ்வுடன்பாட்டை எதிர்த்துள்ளதோடு தாம் பலஸ்தீனத்தின் பூரண விடுதலைக்காகத் தொடர்ந்து போராடப் போவதாகவும் சூளுரைத்துள்ளது. பி.எல்.எப்.பியின் தலைவர் ஜோர்ஷ் ஹபாஸ் 'இவ்வொப்பந்தம் ஒரு கண்துடைப்பு' என்கிறார்.

ஹிமாஸ், ஹிஸ்புல்லா போன்ற ஈரானிய சார்பு அடிப்படைவாதக் குழுக்கள் 'அரபாத் பலஸ்தீனப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து விட்டதாகக்' குற்றம் சாட்டுகின்றன. இஸ்ரேலிய,ஆக்கிரமிப்பினால் நேரடியாகவே பாதிக்கப்பட்ட சிரியாவும், லெபனானும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

'இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே காணப்பட்ட இணக்கப்பாடு ஓர் கேலிக்கூத்து. பலஸ்தீனமும், இஸ்ரேலும் ஒன்றையொன்று அங்கீகரித்திருப்பது என்பது பரிசிக்கத் தக்க ஒரு விடயம்; பலஸ்தீனிய இலட்சியத்திற்குச் செய்யப்பட்ட துரோகம். இவ்வொப்பந்தத்தில் கைச்சாதிடுபவர்கள் மீது எதிர்காலச் சந்ததி 'காறி உமிழும்' என்கிறார் அமெரிக்காவிற்கு எதிராக கடும்போக்கைக் கொண்டுள்ள லிபிய அதிபர் கடாபி.

இவ்வளவும் இந்தச் சமாதான உடன்பாடு தொடர்பாக எழுந்த சார்பான, எதிரான அபிப்பிராயங்கள். உண்மையிலேயே இந்த ஒப்பந்தம் அரபாத் கூறுவது போல 'சுதந்திரமான பலஸ்தீனத்தை நோக்கிய முதலாவது நடவடிக்கையா' அல்லது பி.எப்.எல்.பியும் அடிப்படைவாதக் குழுக்களும் கூறுவது போல இது பலஸ்தீனத்தை காட்டிக் கொடுத்த நிகழ்வா? என்று உடன்பாட்டின் சகல அம்சங்களும் வெளிவராமல் எதிர்வு கூற முடியாவிடினும் இது தொடர்பாய் எழுகிற கேள்விகள் அலட்சியப்படுத்தி விட முடியாதவை.

நீண்ட காலமான பலஸ்தீனப் போராட்டத்தில் யஸீர் அரபாத்தின் தலைமைத்துவமோ, அல்லது அவருடைய அரசியல் சாணக்கியமோ, கடப்பாடோ இதுவரையும் எவராலுமே கேள்விக்குள்ளாக்கப்படவில்லை. எனவே ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக அர பாத் எடுத்த முடிவை எழுந்தமானமாக நிராகரிப்பதும் யதார்த்தமாக இருக்காது.

சோவியத்தின் தகர்வுக்குப் பின்னர் அமெரிக்காவுக்கும், மேற்குலகுக்கும் அராபியத் தேசியவாதமும், இஸ்லாமிய அடிப்படைவாதமும் அச்சுறுத்தலாயிருக்கிறது. இதனைத் தகர்ப்பதற்காக அமெரிக்கா மேற்கொண்ட முயற்சியா இந்த அமெரிக்கப் பொறி? அந்த அமைதிப் பொறியில் அர பாத் அகப்பட்டு விட்டாரா என்கிறது ஒரு கேள்வி.

ஏனெனில் அர பாத்தை அமைதிப் பொறியில் சிக்க வைப்பதனூடாக அமெரிக்கா பலஸ்தீனத்திற்கு ஏகோபித்த ஆதரவைக் கொடுத்து வந்த அரபுலகை பிளவுபடுத்தியிருக்கிறது. சவூதி அரேபியா பாரெய்ன், ஓபான், கடார், ஐக்கிய அரபு குடியரசு போன்ற அராபிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றிருக்கின்றன.

இது தவிர பலஸ்தீன போராட்டக் குழுக்களுக்குள்ளும் பிளவை ஏற் படுத்தியிருக்கிறது. அவை தமக்குள் இது தொடர்பாக மோதிக் கொள்ள ஆரம்பித்து விட்டன. இந்த அரசியல் சூழல் தமிழ் பேசும் மக்களது பிரச்சினை கொ[illegible] புரிந்து கொள்ள முடியும்.



இலங்கை-இந்திய ஒப்பந்தம் இந்திய அரசின் நலன்களுக்கமைய எழுதப்பட்டது போல இதுவும் அமெரிக்க நலன்களுக்கமைய எழுதப்பட்டதாகத் தெரிகிறது. ஏனெனில் ஒப்பந்தம் வெளியானதைத் தொடர்ந்து இஸ்ரேலியப் பிரதமர் நிருபர் ஒருவரின் கேள்வியொன்றுக்கு 'மேற்கு ஆற்றங்கரைப் பிரதேசத்தில் அவ்வாறானதொரு சுதந்திர அரசு அமைய தாம் அனுமதிக்கப் போவதில்லை எனப் பதிலளித்திருக்கிறார்.

→11

நன்றி - நூலகத்திட்டம்





## யாழ்ப்பாணம் இன்று — 8

# இதுவோ கடுங்கோடை

யாழ்ப்பாணத்தில் வியர்வை நன்றாக ஒழுகுகிறது. கோடை. இச் காலங்கள் மிக் நீண்ட கோடை.

"…. இதுவோ கடுங் கோடை. வெய்யிலினால் அல்ல! வெளியார் அரசாட்சி செய்யும் கொடுமைச் சிறப்பே அதுதானே?"

யார் உடம்பிலும் வியர்வை தான் எவர்கிட்டே சென்றாலும் வியர்வை நாற்றம் தான். அதிலும் சைக்கிள் ஓடுகிறார்கள். வியர்வைக்குக் கேட்கவா வேண்டும்?.

சரி, ஒரு நாளைக்கு ஒரு உடுப்புப் போடலாம். அடுத்த நாள் தோய்த்து விட்டு, இன்னொரு உடுப்புப் போடலாம்.

கேட்க நன்றாயிருக்கிறது. சவர்க்காரத்துண்டுக்கு எங்கு போவது? எழுபத்தைந்து ரூபா. யாரினால் வாங்க இயலும்? வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி வாங்கினார்கள். வாங்கமுடியாதவர்கள் என்ன செய்வார்கள்?

இதோ இருக்கிறது வழி. அடுப்புச்சாம்பரைச் சிறிதளவு நீரில் கரைத்துவிட்டு, வடித்தெடுத்து, வடித்த நீரில் உடுப்பை ஊறப்போட்டு, உடுப்பைத் தோய்த்தால் கொஞ்சம் அழுக்கு நீங்கியிருக்கும். அல்லது செவ்வரத்தம் இலைகளை நன்கு அரைத்து அதனை நீரில் கரைத்து, அதனுள் உடுப்புப் போட்டு ஊறவைத்து, பிறகு தோய்க்கலாம். அழுக்கு நீங்க சாத்தியம் உண்டு.

இன்னொரு சிறந்த வழி இருக்கிறது.பனம்பழச் சாற்றைப் பிழிந்து அதனை நீரினுள் கரைத்து, அதனுள் உடுப்பை ஊறப்போட்டுத் தோய்த்தவர்களும் உண்டு.

யாழ்ப்பாணத்துப் பெரும்பாலான மக்கள் இந்த மூன்று வழிகளில் ஒன்றைக் கடைப்பிடித்தே உடுப்பைத் தோய்த்தார்கள்.

நமக்கு ஒரு மாமா இருக்கிறார் "ஏன் இந்தக் கரைச்சலை?" என்று யோசிப்பவர். சேர்ட்டை சைக்கிள் ஹாண்டிலில் சுற்றிவிட்டு வெறும் சாரத்துடன் சைக்கிள் ஓடுவார். எங்கேயாவது இறங்கிப் போகவேண்டுமென்றால், சேர்ட்டைத் தோளில் கொழுவுவார். ஆனால் அவர் வீடு திரும்பும் போது அனேகமாகச் சேர்ட்டை ஹாண்டிலும் காணக்கிடப்பதில்லை.

இப்பொழுது கிராமங்களுக்கு மீன்பெட்டி கட்டி,'ஹோர்ண்' அடித்தபடி இன்னாசிமுத்தோ ராசலிங்கமோ சைக்கிளில் மீன் கொண்டு வருவதில்லை.

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமங்கள் பெரும்பாலும் இராணுவத்திடம். மீனவர்கள் அங்கு இல்லை. ஆழ்கடல் சென்று மீன் பிடிப்பார் யாரும் இல்லை. அயலில் கடற்படை நிற்கும். மீன்கள் இயற்கை மரணம் எய்தின.

மீனவர்கள் வயிறு காய்ந்தது. வயிறு புடைக்கச் சாப்பிட்டு எவ்வளவு காலம்? வேறு வேலை அவர்களால் எது செய்ய இயலும். வைரம் பாய்ந்த உடம்பு. உட்புறமாகக் கிராமங்களிலுள்ள கோயில்களில் அகதியாக அமைதியாக இருந்தது.


பழைய செருப்புக்களை விளக்காக எரிப்பதும், பப்பாளிக் காய்களையும், முருங்கை இலைகளையும் சமையலுக்குப் பயன்படுத்துவதும், வேலியோரத்துச் சுள்ளிகளை விறகாக்குவதும், என அவர்கள் பொழுது போனது.

யாழ்ப்பாணத்து மீன் நலல ருசி. காரணம் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் பரவைக் கடல் அதிகம். அதனால் மீன் சூரியனிலிருந்து ஒளியை நேரடியாக உறிஞ்சுகிறது. அது மீனின் ருசிக்குக் காரணமாக இருக்கலாம். அந்த மீனைச் சாப்பிட முடியாமல் போய்விட்டது.

எப்பொழுது அது இயலும்?

வீரகத்தி ஐயாவுக்கு சனிக்கிழமை முழுக்கு மிகப் பிரியமானது. சனி நீராடு என்பதில் சலிக்காத பக்தி. வாரம் முழு நாளும் உழைத்த உழைப்பு. சனி ஓய்வு.

விடிய எழுந்து தோட்டத்துக் காய் கறிகளைக் கட்டிக் கொண்டு சந்தைக்குப் போனால் எப்படியும் ஒன்பது மணிக்கு திரும்பி விடுவார்.



வந்தவுடன் செய்கிற வேலை உடல் முழுவதும் நல்லெண்ணெய் பூசுவது. வேப்பமரத்தின் கீழிருக்கிற மரவாங்கில் படுத்தபடி, கண்ணுக்குள் எண்ணெய் விடுவார். எண்ணெயால் வாயையும் நிறைத்துக் கொள்வார். கண்ணைத் திறந்தபடி, எண்ணெயையும் விழுங்காமல் அரைமணித்தியாலம் அப்படியே படுத்திருப்பார்

அரைமணித்தியாலம் ஆயிற்றா? கண்ணிலிருந்து கண்ணீர் ஒழுகும் சிறிது சிறிதாக எண்ணெயை விழுங்குவார்.

வீட்டின் கோடியில் இரண்டு போத்தல் கள்ளுஞ் முட்டியில் இருக்கும் பன்னிரண்டு மணிவரை ஆறுதலாகக் குடிப்பார்.

முழுக்கு ஒரு வேள்வி தான். அரப்பும் தேசிக்காயும் சேர்த்து அவித்திருக்கும். ஆவி பறக்கும் தேசிக்காயை நன்கு தேய்த்து உடலெல்லாம் பூசுவார்.

எல்லாம்' தெரிகிற மாதிரி ஒரு கோவணத்துண்டு மாத்திரம் தான் ஆதலினால் உடலின் சிறு அங்குலமேனும் அவர் கையிலிருந்து தப்பாது.

தேசிக்காயைத் தேய்த்த பின்பு, கொதிக்கிற அரப்புடன் கிணற்றுக்கட்டிற்குப் போனால், அரப்பினால் உடம்பு முழுக்கப் பிடித்து விடுகிறமாதிரி, சூடு பறக்கத் தேய்ப்பார்.

ஏதாவதொரு தோட்டத்துண்டுக்கு தண்ணீர் போகிறமாதிரி இறைத்து விட்டு, அதில் தலையை வைப்பார்.

துண்டு எடுத்து துடைக்கிற போதும் சூடு பறக்கும்.

இரண்டு மணிக்கு சாப்பிடக் குந்துவார். ஆட்டிறைச்சி அல்லது கோழிஇறைச்சி கட்டாயம் விளைந்த விளைமீனில் பொரியல் முக்கியம்.

மூன்று கோப்பைசாப்பாட்டுக்குக் குறைவில்லை.

சுருட்டும் பத்திக்கொண்டு நித்திரை கொண்டு எழும்பினாரென்றால், தலை பஞ்சாய்ப் பறக்கும். ஒரு இஞ்சி போட்ட மல்லித் தண்ணி அவ்வளவுதான்.

சனிக்கிழமை யாகம் அத்துடன் நிறைவுபெறும்.

வீரகத்தி ஐயா, இப்படி அல்லது சற்றுக் குறைவு பட்டு இப்பொழுதும் முழுகலாம். ஆனால் விளைந்த விளைமீனுக்கு அவர் எங்கு போவார்?

சராசரி வாழ்விலிருந்து யாழ்ப்பாணம் சற்றுப்பின்தங்கி விட்டது. நாளாந்த வேலைகள் ஒழுங்குக்குள் இல்லை.

திடீரென்று இராணுவம் கிராமங்களை ஆக்கிரமிக்கிற போது, யாவரும் சிதறி ஓடுகிறார்கள். பிறகு எங்கு சந்திப்பார்கள்? சில சமயம் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் இருக்கலாம். அல்லது வெளியே எங்கேனும் அகதியாக இருக்கலாம்.

இங்கு அயல்வீட்டுடன் நெருக்கம் அதிகம். வீடுகளின் இடையில் வேலி இருக்கும். வேலி பிரிந்திருக்கும் - புதினம் பார்க்க வசதியாக. ஆனால் அயல் வீட்டிற்குப் போய் வரவும் இந்த வேலி தான் பாதை.

எப்படியோ உறவினர்களே அயல்வீட்டில் இருப்பதால் நெருக்கம் அதிகம். அடிக்கடி சண்டை சச்சரவு வந்த போதிலும், உடனே ஒட்டிப் போய்விடுவார்கள். கை அடித்து தண்ணியைப் பிரித்து விட முடியாது. ஆனால் கிராமங்களுக்குள் இராணுவம் வருகிறபோது அயல்வீட்டார் பிரிகின்றனர். யார் யார் எங்கிருக்கிறார்களோ? ஏன் குடும்பமே பிரிகிறது. வீரகத்தி ஐயா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு அகதி முகாமில், அவர் மனைவி செல்லம்மாவும் பிள்ளைகளும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு அகதிமுகாமில்.

யாழ்ப்பாணத்தையும் வன்னியையும், பிரித்து இடைஞ்சலாக இருக்கிற ஆனையிறவு இராணுவ முகாம் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பது யாவருக்கும் உவப்பான விடயம்.

ஆனையிறவு இராணுவமுகாம் தகர்க்கப்படத் தொடங்கியது. மக்கள் அந்தத் தாக்குதலுக்கு ஏதோ ஒரு வழியில் உதவுவதற்கு விரும்பினார்கள்.

முதல் மூன்று நாள் போரிலும் புலிகள் கணிசமானளவு இராணுவ முகாமை நெருங்கியிருந்தார்கள். பதட்டமான சூழல்.

வெற்றிக்கனி கிட்டுமா?

**அருணா பரமேஸ்வரன்**

# நாலு வார்த்தை எழுதவிடு

சூரியா

## குணா

குணா என்று தமிழில் ஒரு சினிமா. உச்சங்களைத் தொட்டதொன்றல்ல. ஆனால் சராசரியான சினிமாவாகவும் இதனைக் கொள்ள முடியாது. தமிழில் குறிப்பிட வேண்டியது. ஆனால், இவ்வாறு எழுதுவதனால், ஓடிப்போய் திரையில் இச் சினிமாவைப்பார்த்து "இதனையா நல்ல சினிமா என்று சொன்னாய்" என என்னை நீங்கள் திட்டினால், அதுவும் சரிதான்.

ஆனால் ஒன்று சொல்கிறேன். இத் திரைப்படம்.குறித்து எழுதாமல் இருக்க முடியவில்லை.

குணா என்கிற இச் சினிமாவின் முக்கிய கதாபாத்திரத்தைக் **கமலஹாசன்** செய்திருந்தார். வசனம் **பாலகுமாரன்**. இசை **இளையராஜா**. ஒளிப்பதிவு **வேணு**. படத்தொகுப்பு **லெனின்**. நெறியாள்கை **சந்தான பாரதி**.

குணாவின் பிறப்பிடம் சரியில்லாதது. குணா சொல்வது மாதிரி 'அசிங்கம்'. தகப்பன் ஓடி விட்டார். அவனது தாய், உறவினர், அயல் விபச்சாரத் தொழில் செய்பவர்கள். அது அசுத்தம் என்று நினைக்கிறான். குணாவும் முழுமையானவன் அல்ல. அவன் சிறிது கோணலானவன். அவனுள் ஒரு கற்பனை உருவம் அபிராமி. மனதுள் உருவகித்திருந்த அபிராமி எனும் பிம்பத்தை நிஜத்தில் சந்தித்து விடுகிறான். தனது அழுக்குகளை நீக்கக் கூடியவள் அபிராமி என்பது அவன் பிரமை. குணா அபிராமியைக் கடத்துகிறான். முதலில் முரண்டு பிடித்தாலும் பின்னர் குணாவின் அன்பில் அவள் பிரியப்படுகிறாள். இரு மனம் இணைகிறது என்ற போதிலும், சமூகம் சிக்கலைக் கொடுக்கிறது.

மேலும் கதையை நீட்டி முழக்கத் தேவையில்லை.

ஒளிப்பதிவு, இசை இன்ன பிற அம்சங்கள் திரைப்படத்தை வலுவுறச் செய்கின்றன.

இச் சினிமா குறித்து நான் மூன்று விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1) பாரம்பரியக் கருதுகோள்கள் சில இச் சினிமா எனும் சாதனத்திற்கு வலுவான அர்த்தம் கொடுக்கின்றன. 'குணா' என்பது அவனது பெயர், இச் சினிமாவின் தலைப்பு. ஆனால் குணா குணங்களைக் குறித்து வருகிறது. அவன் வித்தியாசமான குணம் கொண்டவன். அவன் சுட்டு விரலை வானை நோக்கிக் காட்டியபடியே உரையாற்றுவான். டொக்டர் (கிரிஷ் கர்னாட்) அவன் விரலை மடக்கி நிலத்தைக் காட்டி நிலத்திற்குரியவன் நீ என்பார். அவன் பஞ்சை ஊதி மேலே பறப்பதனைக் காட்டி தான் அது என்பான். தலைப்பு சரியாகப் பொருந்துகிறது. பஞ்சு மேல் நோக்கிப் பறந்தாலும், மீண்டும் நிலத்திற்கே வருகிறது. திரைப்படத்தின் இறுதியில் குணாவும் தன் காதலியுடன் ஆழமான பள்ளத்தாக்கில் குதித்து இறக்கிறான். அவன் காதலியுடன் முன்னர் சல்லாபித்தது மிக உயரமான மலையில் என்பது குறிப்பிட வேண்டியது.

அபிராமி அவனது பிரமை. அபிராமிப் பட்டருக்கும் அபிராமி அம்மன் பிரமைதான். அபிராமிப் பட்டரும் ஒரு அமாவாசை நாளைப் பூரணை என்கிறார். அம்மன் அருளால் அமாவாசை அன்று பூரணை தெரிகிறது. இவன் பூரணை அன்று அபிராமியைத் திருமணம் முடிப்பதாக நினைக்கிறான். எந்த அத்திவாரமுமில்லாத ஒரு கற்பனை. ஆனால் அது சாத்தியப்படுகிறது பூரணைக்கு முதல் நாள். அபிராமி கூறுகிறாள் "மனசு நிறைந்திருந்தால் அதுதான் பூரணை." அபூர்வமான சேர்க்கை அது.

குணா திரைப்படத்தில் இத் துண்டுகள் மிக வலிவானதாகக் காணப்பட்டது.

2) சில துண்டுகள் (shots)பிறேம்கள் தமிழ்ச் சினிமாவில் உச்சத்தைத் தொட்டது. குணா முதன் முதலாக கோயிலில் அபிராமியைக் காண்கிறான். ஒரு அம்புக்குறி தட்டுப்பட்டு அவளைப் பார்த்து நீட்டிக் கொண்டு நிற்கிறது. குணா அபிராமியை நோக்கிப் போகிறான். அபிராமி குனிந்து லட்டு எடுத்துக் கொடுக்கிறாள். குணா ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கிறான். (பின்னணியில் **ஜேசுதாஸ்** பாடல்) அவள் குனிந்திருக்கிறாள். இரு முலைகள். இரண்டு லட்டை குணாவின் கையில் வைக்கிறாள். குணா அவள் கையை முத்தமிடுகிறான். இரண்டு லட்டும் அவனுக்கு இரு முலைகள். தமிழ்ச் சினிமாவில் நாலைந்து நிமிடத்திற்கு இது அற்புதமான காட்சியாக உருவாக்கப்படுகிறது. பரிணமிக்கிறது.

குகையில் பாறைகளுக்கிடையில் அவர்கள் திருமணம் நடைபெறுகிறது. மிக அழகாக வந்திருந்த காட்சி அது. அபிராமி அந்தாதியிலிருந்து ஒரு பாடல். இளையராஜாவின் இசையில் நன்கு இழையோடுகிறது. டொக்டரிடம் நடந்தால்தான் தன் கதை சொல்ல இயலுமென நடந்து, நடந்து, நடந்து, நடந்து….. தன் கதை சொல்கிறான்.

சில சந்தர்ப்பங்களில் இத்தகைய துண்டுகள் குணா திரைப்படத்தை ஒப்பற்றதாக உயர்த்தி நிற்கிறது.

3) மூடுபனி, **சிவப்பு ரோஜாக்கள்** போன்றனவும் சில தன்மைகளில் இச் சினிமாவின் அம்சங்களைக் கொண்டிருந்தாலும், சினிமாவின் படிமம், அதன் ஆழம் எனும் வகையில் இச் சினிமா வேறுபடுகிறது. ஆனால் கதைப் போக்கின் தன்மையில் வேறுபட்டிருந்தாலும் ஆங்கிலத்தில் வெளியான "**குயிற் கூட்டின் மேலாக ஒரு பறப்பு** (One flew over the cuckoos nest) எனும் திரைப்படத்தை ஒத்திருக்கிறது. அதில் நடித்திருந்த ஜாக் நிக்கல்சன் (Jack Nickolson) இன் பாத்திரம் குணா போன்றதுதான். சிறிது மனநிலை சரியில்லாதவன். ஆனால் **குயில் கூட்டின் மேலாக ஒரு பறப்பு** சினிமாவின் முன்னால் குணா வெறும் தூசு. அதற்கு மிக முக்கிய காரணம் குணாவின் திரைப்படப் பிரதி மிகப் பலவீனமானது.


குணா அபிராமியை விரும்புகிறான், கடத்துகிறான். அபிராமி பணக்காரி. அவள் சொத்தை அடையச் சிலர் முயற்சிக்கிறார்கள். அதுவே பிரதான சிக்கலாகிறது. இடைவேளைக்குப் பிறகு மலையில் அடிக்கடி நடைபெறுகிற சண்டையிலேயே திரைப்படம் நகர்கிறது. குணாவையும் அதி திறமை வாய்ந்தவன் ஆகக் காட்டுவது சினிமாவின் வலுவைக் குறைக்கிறது.

→ 11

நன்றி - நூலகத்திட்டம்



# இஸ்லாம்:- மேற்கின் கண்ணோட்டங்கள்



சந்த்ரா முஸாபர்

தமிழில்: காதிப்

## காலனிய ஆதிக்கம் :-

எனினும் நூற்றாண்டுகளாக இந்தக் கூட்டு மறதியை நீடிக்கச் செய்து வருவது சிலுவைப் போர்களினது வெற்றியினது நினைவு மட்டுமல்ல; மேலும் இன்னுமொரு முக்கியமான காரணத்திற்காகவும் இஸ்லாத்தை மறைப்பதற்கு மேற்கு தீர்மானித்திருந்தது. குறிப்பாக, இக்காரணிதான் இஸ்லாம் மற்றும் முஸ்லீம்கள் குறித்த மேற்கின் சமகாலத்திய எதிர்ப்புக்கான வேராக இருக்கின்றது. மேற்கின் காலனித்துவத்திற்கும், நவ-காலனித்துவத்திற்கும் முஸ்லீம்கள் காட்டி வருகின்ற தொடர்ச்சியான எதிர்ப்புத்தான் இந்தக் காரணமாகும். 19ம்,20ம் நூற்றாண்டுகளில் மேற்கத்திய காலனித்துவத்தின் உச்சநிலையில், அந்நிய ஆதிக்கத்தைத் தீவிரமாக எதிர்ப்போர் மத்தியில் முஸ்லீம் பிரிவினர் இருந்தனர். இந்தியா போன்ற முஸ்லீமல்லாதோர் பெரும்பான்மையாக இருந்த சமூகங்களிலும் கூட, மேற்கின் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான உணர்வுகளை வெளியிட்ட ஆரம்பப் பிரிவினராக முஸ்லீம்களே இருந்தனர். சிராஜ்- உத்தௌலா, உமர் முக்தார், செயட் ஜமாலுதீன், அப்கானி போன்ற முஸ்லீம் சுதந்திரப் போராளிகள் காலனித்துவ அதிகாரிகளினால் ஏன் அடிக்கடி களங்கப்படுத்தப்பட்டார்கள் என்பதற்கு இதுவே காரணமாகும் (நிச்சயமாக, வலிமைமிக்க காலனித்துவ சக்திகளின் கோபத்திற்கு ஆளான ஏராளமான புகழ் பெற்ற முஸ்லீமல்லாத சுதந்திரப் போராளிகளும் இருந்திருக்கிறார்கள்.)

## எண்ணெயும், மேலாட்சியும்:-

மரபுவழி காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வந்ததிலிருந்து, முஸ்லீம் சமூகங்கள் தாம் மீண்டும் ஒருமுறை மேற்கின் புதிய வடிவிலான மேலாதிக்கத்தின் இலக்குகளாக்கப்பட்டிருப்பதைக் கண்டு கொண்டிருக்கின்றன. இவ்வாறு அவர்கள் இலக்காக்கப்பட்டிருப்பதற்கான பிரதான காரணம், மேற்கத்தைய நாகரீகத்தின் ஜீவரத்தமான எண்ணெய் மூலங்களின் பெரும்பகுதி முஸ்லீம்களின் காலடியின் கீழ் இருப்பதுதான். குறைந்தது கடந்த நான்கு தசாப்தங்களாக, அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையானது முஸ்லீம்களினதும் தெற்கினதும் எண்ணெய் வளங்களில் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் செல்வாக்கையோ அல்லது அதன் கட்டுப்பாட்டையோ எதிர்க்கின்ற எவரும் உடனடியாகவே 'தீவிரவாதி' (Extremist or Radical)என்றோ அல்லது எளிதாக 'அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் அச்சுறுத்தல்' என்றோ முத்திரை குத்தப்படுகிறார்கள். ஈரானின் பிரதமராக இருந்த முகமட் மொஸாதீக் 1953ல் தனது நாட்டின் எண்ணெய் வளங்களைத் தேசியமயமாக்கியதன் மூலம் குறுகிய ஆனால் கிளர்ச்சிமிக்க சூழ்நிலையை ஏற்படுத்திய போது அவரின் தலைவிதி இவ்வாறு அமைந்தது. 1970களின் ஆரம்பத்தில் லிபியா மற்றும் ஈராக்கிய தலைமை எண்ணெய் வளங்களின் மீது தமது கட்டுப்பாட்டை நிறுவியதிலிருந்து அவர்களது தலைவிதியும் இவ்வாறுதான் அமைந்து வருகிறது. 1979ல் ஈரானில் இடம்பெற்ற இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் தங்களுக்குச் சொந்தமான எண்ணெய் மற்றும் கனிப்பொருள் வளங்களின் மீது தமது இறைமையை நிலைநாட்ட முயற்சித்த ஈரானியத் தலைமையின் தலைவிதியும் கூட இவ்வாறுதான் இருக்கிறது. இந்தத் தலைமைகளின் சித்தாந்தப் போக்கு என்னவாக இருந்த போதிலும் -உண்மையில் இவை ஒவ்வொன்று ம் வெவ்வேறு வழிகளில் இஸ்லாத்துடன் இணைந்தவையே- அவர்கள் அனைவரும் முஸ்லீம் தீவிரவாதிகள் என்றும், பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பவர்கள் என்றுமே மேற்கு தீர்மானித்திருக்கிறது. இவ்வாறு இந்தத் தலைமைகளை உணர்வுபூர்வமாக களங்கப்படுத்துவதன் மூலம், அவர்களது தவறான நடத்தைகளில் அதிகம் பாதிப்பைச் செலுத்த முடியவில்லை (அவை நிலைத்திருக்கின்றன) என்பதையும், மாறாக, விலைமதிப்பற்ற தமது இயற்கை வளங்களின் மீது, அவர்கள், தமது அதிகாரத்தைக் கொண்டிருப்பதற்குரிய உரிமைக்கான கோரிக்கையை எழுப்புவதில் தான் இது அதிகம் பங்களித்திருக்கிறது என்பதையும் மேற்கத்தைய மற்றும் கிழக்கத்திய வெகுஜனங்கள் கூட உணரமுடியாமல் இருக்கிறார்கள்.

## ஸியோனிசம்:-

எனினும் இஸ்லாத்தையும் முஸ்லீம்களையும் இழிவுபடுத்துவதற்கும், சிறுமைப்படுத்துவதற்கும் பின்னாலிருப்பவை மேற்கின் மேலாதிக்கத்தை தொடர்ச்சியாகப் பேணுவதற்கும், எண்ணெய் வளங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் விரும்புகின்ற சக்திகள் மட்டுமல்ல; ஸியோனிசமும் கூட இந்த விடயத்தில் பிரதான பாத்திரம் வகிக்கின்றது. 19ம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் மீதும் முஸ்லீம்கள் மீதும் ஸியோனிசம் ஆரம்பித்த தாக்குதலானது, 1948இல் இஸ்ரேலின் உருவாக்கத்துடன் இன்னும் அதிக தீவிரம் பெற்றது. மேற்கின் தகவல் மற்றும் அறிவுத் துறைகள் மீது ஸியோனிசுகள் கொண்டிருக்கின்ற அளவற்ற செல்வாக்கின் மூலம் இஸ்லாமியக் கோட்பாடுகள் (Theology) மற்றும் இஸ்லாமிய சமூகத்தில் உள்ள பலதார மணப் பிரச்சினை, பெண்களின் நிலை போன்ற குறிப்பிட்ட விடயங்களை இலக்காகக் கொண்டு, இஸ்லாத்திற்கும் அதைப் பின்பற்றுபவர்களுக்கும் இழுக்கேற்படுத்த முயற்சிக்கின்றனர். அத்தோடு அவர்கள், இஸ்லாம் ஒரு தீவிரவாத நம்பிக்கை சார்ந்தது என்றும், முஸ்லீம்கள் வன்முறைக்கு ஆதரவளிப்பவர்கள் என்றும் விபரிக்க முயற்சிக்கிறார்கள்.

பிரமாண்டமான ஸியோனிசப் பிரச்சார சாதனம், முஸ்லீம்களையும் இஸ்லாத்தையும் ஏன் இவ்விதம் அவமானப்படுத்தக் கூடிய வகையில் வெளிக்காட்ட முயற்சிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வதில் சிரமமேதுமில்லை. இஸ்லாத்தைக் கொடூரமானதாகவும், முஸ்லீம்களை அருவருப்பானவர்களாகவும் விபரிப்பதன் மூலம் உண்மையில் ஸியோனிஸ்டுகள் தாம் சட்ட விரோதமாகவும், அநீதியான முறையிலும் பாலஸ்தீன மற்றும் அராபிய நிலங்களைக் கைப்பற்றி, இணைத்து வைத்திருப்பதை நியாயப்படுத்த முயற்சிக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், தங்களது வன்முறைக்கும், அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டிருப்பவர்களையே ஆக்கிரமிப்பாளர்கள் எனக் காட்டுவதன் மூலம் குள்ளத்தனமிக்க இந்த ஆக்கிரமிப்பாளர்கள் தமது வன்முறையையும், அடக்குமுறையையும் மறைக்க முயற்சிக்கிறார்கள். இஸ்ரேலிய ஆக்கிரமிப்பையும் குடியேற்றத்தையும் எதிர்க்கின்ற உண்மையான சுதந்திரப் போராளிகளான பாலஸ்தீனர்களும், அரேபியர்களும் 'பயங்கரவாதிகள்', மற்றும் 'தீவிரவாதிகள்' என்று முக்கியமான மேற்கத்திய தகவல் சாதனங்களில் ஏன் தொடர்ச்சியாக விபரிக்கப்படுகின்றார்கள் என்பதை இந்த உண்மை விளக்குகிறது.

## இஸ்லாமிய மீளெழுச்சி

இஸ்ரேலிய மற்றும் மேற்கின் மேலாதிக்கத்தை எதிர்கின்ற பாலஸ்தீனர்களையும், அராபியர்களையும் இவ்விதம் பாதகமான வகையில் சித்தரிப்பது எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் கடுமையாகும் எனக் கருத முடியும். ஏனெனில் மேற்கின் ஆதிக்கத்திற்கு எதிராக மட்டுமன்றி, மேற்கின் அதிகாரத்துடன் துணை போகின்ற உள்நாட்டு ஆளும் பிரிவினருக்கும் எதிராக வெளிப்படுகின்ற உணர்வெழுச்சியானது இப்போது இஸ்லாமிய சித்தாந்தத்தினூடாக கடத்தப்படுகிறது. உண்மையில் சர்வதேச அதிகாரத்துவத்தினதும், உள்நாட்டு சர்வாதிகாரிகளினதும் விலங்குகளிலிருந்து நேர்மையான முறையில் விடுதலை பெற்றுக் கொள்வதில் ஆர்வமுள்ள அனைத்து முஸ்லீம்களையும் இணைக்கின்ற சித்தாந்தமாக இஸ்லாம் விரைவாக வெளிப்பட்டு வருகின்றது. மேற்கின் முக்கியமான அதிகார நிலையங்களில் இஸ்லாம் பற்றிய கண்ணோட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற முதன்மை நிலையின் மூலம், இஸ்லாமிய மீள் எழுச்சிக்கு மேற்கின் அரசியல் மேட்டுக்குடிப்பிரிவினரும், அபிப்பிராயங்களை உருவாக்குபவர்களும் (opinion makers) வழங்கக் கூடிய பிரதிபலிப்புக்கள் (responds)இன்னும் கூடுதல் ஆத்திரத்துடனும் எதிர்ப்புடனும் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்க முடியும்.

இந்த நிலைமை உண்மையாகவே வருந்தத்தக்கதாகத்தான் இருக்கும். இது அனைத்துத் தப்பெண்ணங்களினாலும் மோசமாக்கப்பட்ட பாரிய முரண்பாட்டுக்கும் போராட்டத்திற்கும் மட்டுமே இட்டுச் செல்லும். மேலும் இஸ்லாத்தையும் முஸ்லீம்களையும் திறந்த மனத்துடனும், திறந்த இதயத்துடனும்' புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் துயருக்குரிய முறையில் இன்று நழுவிக் கொண்டிருக்கின்றது. கரன் அம்ஸ்ட்ரொங் (karen Amstrong)என்னும் கிறிஸ்தவ அறிஞர் மேற்கு முஸ்லீம் உறவுகள் குறித்த தனது ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:- ''மேற்கில் உள்ள நாங்கள் எமது தப்பெண்ணங்கள், ஆதிக்கவாதம், மற்றும் பேராசை என்பவற்றின் விளைவான எமது சொந்தக் கொடூரத்தனங்களை அகற்றிக் கொள்ள வேண்டும், அத்துடன் மாபெரும் குறிக்கோளுக்காக முயற்சிக்க வேண்டும்.'' இத்தகைய செயற்பாட்டில் மேற்குக்கும்-இஸ்லாத்திற்கும் இடையில் நேர்மையான நல்லுறவும், அமைதியும் நிலவுவதற்கு, ஒரு சில அதிகாரமிக்க நபர்கள், அதிகாரமற்ற பலரை ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்கின்ற இன்றைய அமைப்புக்கள், அனைவருக்கும் நீதியும், சமத்துவமும் வழங்கக்கூடிய புதிய நிறுவனங்களால் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை மேற்கு உணரும் என்று எதிர்பார்க்கலாம். மேற்கு தன்னை மதிப்பிடுவது போன்று, அதேநேரத்தில் முஸ்லீம் உலகும் தன்னை விமர்சனபூர்வமாக பரிசீலிக்க வேண்டும், சகல உணர்ச்சிகரமான ஆற்றலுடனும் இஸ்லாம் பெற்றிருக்கின்ற எழுச்சியானது, குறிப்பிட்ட முஸ்லீம் மனோபாவங்கள், மற்றும் முதன்மை அம்சங்கள் பற்றி சில தேடலுக்குரிய கேள்விகளை எழுப்பும்படி எம்மைக் கட்டாயப்படுத்துகின்றது. ''உம்மா ''(ummah முஸ்லீம் சமூகம்) முகம் கொடுத்து வருகின்ற மிக முக்கிய பிரச்சினைகளில் சிலவான வறுமையும், பசியும், நோயும், படிப்பறிவின்மையும் சார்ந்த சவால்களுக்கு இஸ்லாமிய மீள் எழுச்சி போதிய கவனம் கொண்டிருக்கின்றதா?

மாற்றாக அமையக்கூடிய இஸ்லாமிய சமூக ஒழுங்கில், வெளிப்படையாகத் தெரியக்கூடிய, கல்வியும்-அறிவும்; விஞ்ஞானமும்- தொழில்நுட்பமும்; அரசியலும்-நிர்வாகமும்; பொருளாதாரமும்-முகாமைத்துவமும் போன்ற விடயங்கள் குறித்துப் பேசுகையில், வெறும் வார்த்தை ஜாலங்களுக்கு அப்பால் இஸ்லாமிய மீள் எழுச்சி போயிருக்கிறதா?

சில துறைகளில் ஒரு முழுமையான போக்கு என்ற வகையில் இஸ்லாமிய மீள் எழுச்சியானது சடங்குகளிலும் பாரம்பரியச் செயற்பாடுகளிலும் குறியீடுகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது என்பது உண்மையல்லவா?

இஸ்லாமிய மீள் எழுச்சியைப் பொறுத்தவரை சட்டம் மற்றும் ஒழுங்குகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் இவை மாறக்கூடியவை என்பதற் குப் பதிலாக, நிலையானவை என்ற போக்கு வெளிப்படுவது உண்மையல்லவா?

முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை சமூகங்களின் நிலை குறித்தும், சமூகத்தில் பெண்களின் பாத்திரம் குறித்தும் இஸ்லாமிய மீள் எழுச்சி மரபின் நிலைப்பாடானது, குர்ஆனினதும் சுன்னாஹ்வினதும் (Sunnah முகம்மது நபியின் வாழ்க்கை முறை.) அடிப்படைக் கொள்கைகள் மற்றும் விழுமியங்களுடன் இணங்கிப் போகின்றதா?

வறுமை தொடக்கம் அரசியல் வரையிலான பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்துப் பிரதிபலிக்கப்படுகின்ற இஸ்லாமிய மீள் எழுச்சியின் தனித்துவமானது குர்ஆனின் ஆன்மாவையும் எழுத்துக்களையும் கைவிடுவது போன்றிருக்கின்றது என்பது உண்மையில்லையா?

இஸ்லாத்தைப் பற்றிய தங்களின் விளக்கங்கள்தான் இஸ்லாத்தையும் புரிந்து கொள்வதற்கான ஒரே' யொரு, சரியான வழிமுறை என வலியுறுத்துவதன் மூலம் இஸ்லாமிய மீள்எழுச்சிவாதிகள், முஸ்லீம் சமூகத்தினர் மத்தியில் குறுகிய மனோபாவத்தை ஏற்படுத்துகிறார்கள் என்றவகையில் அவர்கள் குற்றவாளிகளாகிறார்களா?

இஸ்லாமிய மீள் எழுச்சிவாதிகள் அனேகமாகத் தம்மையறியாமலேயே, தமது சமூகத்திலுள்ள சிறிய பிரிவினரான சுயநல நோக்கங்கள் கொண்ட சிறிய அரசியல் பிரிவினருக்கு (factionalisation and fragmentation) உதவுகின்றனரா?

உண்மைக்கு இன்னொரு பக்கம் இருக்கின்றது என்பதை நாம் ஒத்துக் கொள்வதற்கான நேரம் அனேகமாக இப்போது வந்துவிட்டது: இன்றைய உலகில் எமது சமூகத்தைப் பற்றியும் மதத்தைப் பற்றியும் பாதகமான மதிப்பீடுகள் உருவாவதற்கு, ஒரு குறிப்பிட்ட அளவில் முஸ்லீம்களாகிய நாமும் காரணமாக இருந்திருக்கிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



சிலாபம் நகரிலிருந்து ஏறத்தாழ 10 கிலோமீற்றர் தூரம் புத்தளம் நோக்கிய பயணத்தில் எதிர்ப்படுகிறது இரணவில என்ற அமைதியான கிராமம். அடர்ந்த தென்னந் தோப்புக்கள் நிறைந்த வளம்மிக்க கடற்கரையை அண்டிய இக்கிராமம் இன்று கனரக வாகனங்களாலும் ஆயுதம் ஏந்திய பொலிஸாரினாலும் களேபரப்படுகிறது. 'அமெரிக்காவின் குரல்'(Voice of America)என்ற அமெரிக்கத் தொடர்பு நிலையம் ஒன்று அமைக்கப்படுவதற்கென 99 வருட குத்தகைக்கு அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டுவிட்ட 1200 ஏக்கர் நிலத்தில் நடைபெற்றுவரும் கெடுபிடிகள் அப்பகுதி மக்களை திகிலிலாழ்த்தியுள்ளன. மின்சாரத்தைக் கூடக் காணாத இந்தப்பகுதி மக்கள், தமது அமைதியான வாழ்வைக் குலைத்து விட வந்த அரக்கனாகவே இந்த ஒலிபரப்பு நிலைய நிர்மாணத்தைப் பார்க்கிறார்கள். தற்போது 413 ஏக்கர் நிலப்பரப்பில் கனரக இயந்திரங்கள் குவிக்கப்பட்டு வேரோடு தென்னைமரங்கள் சாய்க்கப்படுவதையும், பிரமாண்டமான முட்கம்பி வேலிகள் போடப்பட்டு நிர்மாணப்பணிகள் நடப்பதையும், கிராமவாசிகளோ, பத்திரிகையாளர்களோ உட்செல்ல அனுமதிக்கப்படாது கெடுபிடிகள் நிலவுவதையும் கண்டு அச்சத்துடன் குரலெழுப்புகின்றனர் இரணவில கிராமவாசிகள்.

அமெரிக்காவின் இந்த ஒலிபரப்பு நிலைய நிர்மாணத்திற்கு அனுமதி அளித்ததை எதிர்த்து, ஒவ்வொரு வெள்ளியும் கத்தோலிக்கர்களான அக்கிராம வாசிகள் எதிர்ப்பு மத ஊர்வலங்களை நடாத்தி வந்தனர். கந்தளம ஹோட்டேல் விவாகாரம் போல பிரபல்யமடையாத போதும், அவர்கள் அமைதியாக நடாத்தி வந்த இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை கடந்த யூலை 23ம் திகதி ஆயுதப்படையினரைக் குவித்து அடக்கியது ஸ்ரீலங்கா அரசு. ஊர்வலத்தை நிறுத்தும்படி மிரட்டினார்கள் படையினர். மீறி ஊர்வலம் தொடருமானால் சுட்டுத்தள்ளுவோம் என எச்சரித்தனர். ஊர்வலம் தடைசெய்யப்பட்ட தினத்தில் இருந்து, இந்த 'அமெரிக்காவின் குரல்'க்கு எதிர்த்தாற் போல இருந்த பஸ்தரிப்பு நிலையம் ஒரு பொலிஸ் காவல் நிலையமாக மாறி உள்ளதுடன், இந்த பஸ்தரிப்பு நிலையம் ஒரு பொலிஸ் நிலையமாக கட்டப்பட்டும் வருகிறது.

''யாரைப் பாதுகாக்க இந்த பொலிஸ் நிலையம்? எங்களையா அல்லது இந்த அமெரிக்காவின் குரலையா?'' என்று கேட்கின்றார்கள் இரணவில 'பிரதேச மக்கள்'.

0 0 0

நிலமைகளை நேரில் கண்டுவர சென்ற போது, பத்திரிகையாளன் என்ற 'அடையாளத்துடன்' உள்ளே போவது சாத்தியமில்லை என்று தெளிவாகவே தெரிந்தது. சாதாரண 'விடுப்புப் பார்க்கும்' ஒருவனாக உள்ளே செல்ல முயன்ற முயற்சியும் பயனளிக்கவில்லை. கடுமையான பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஓரளவுக்கு உள்ளே செல்ல முடிந்த போதும், யாரும் போக முடியாத பகுதி என்று ஒரு பகுதி உள்ளே இருப்பது தெரிந்தது. ஒரு புகைப்படம் கூட எடுக்க அனுமதி கிடைக்கவில்லை.

சுற்றிவர உள்ள கிராமவாசிகள், மத குருமார் போன்றோரிடமிருந்து மட்டுமே தகவல்கள் பெறக்கூடியதாக இருந்தது.

அங்கு நிர்மாண வேலைகளில் ஈடுபடுகின்ற ஊழியர்களில் ஒருவர் கூட எந்த தகவலையும் தெரிவிக்க தயாராக இருக்கவில்லை.

## மின்சாரம் பாய்ச்சிய முட் கம்பி வேலி

சுற்றிவர உள்ள வேலி பிரமாண்டமான (இராணுவ முகாம்களைச் சுற்றிப் போடப்படுவது போன்ற) முட்கம்பிகளுக்கு மின்சாரம் பாய்ச்சப்பட இருப்பது பற்றி குறிப்பிட்ட ஒரு 'பிரதேசவாசி' இவ்வாறு தெரிவித்தார்:

'வெறும் ஒலிபரப்பு நிலையம்தான் என்றால் எதற்காக கம்பிகட்கு மின்சாரம் பாய்ச்ச வேண்டும்? இது பற்றி கேட்டவர்களுக்கு அவர்கள் சொன்னார்களாம், 'அந்த மின்சாரம் கொல்லாது, தூக்கி வீச மட்டுமே செய்யும் என்று:..'

## 5000 தென்னைகள் சரிக்கப் பட்டுள்ளன


நிர்மாண வேலைக்களுக்கென இதுவரை 413 ஏக்கர் பரப்பிலுள்ள 20,000க்கும் மேற்பட்ட தென்னை மரங்களில் 5000க்கும் மேற்பட்ட தென்னைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. 'அமெரிக்காவின் குரல்' செயற்பாட்டுக்காக 1500 கிலோ வாட் மின் தேவைப்படுவதால் ஐதரசன் மின் உற்பத்தி நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் குரலுக்கான பாதையமைக்கும் பணிகளுக்கென 9 குடும்பங்களின் நிலங்கள் குறிப்பிட்ட அளவு கவரப்பட்டுள்ளன

அமெரிக்காவின் குரல் கட்டுமான வேலைக்கு 11 1/2 லட்சம் கியூப் சரளைக்கற்களும் 2 லட்சம் கியூப் மணலும் தேவைப்படுமென கணக்கிடப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு செல்லும் போது புழுதி அதிகமாக பறக்கும். பிள்ளைகளின் பாடசாலைச் சீருடையை தினசரி கழுவ வேண்டும் எனவும் தங்களுக்கு அவ்வாறு செலவழிக்க முடியாது என்றும் வேதனைப்பட்டார் வயதான ஒருவர். அமெரிக்காவின் குரலுக்கென பரப்பை விஸ்தீரப்படுத்தி தங்களது நிலங்களை சூறையாடிவிடுவர் என்றும் தங்களுக்கு வேறு போக்கிடம் கிடையாது என்பதும் தங்களது பாரம்பரிய மீனவத் தொழிலை விட்டால் தாம் வேறு என்ன செய்வது என்பதுவும் அவர்களது கவலைகள். பறக்கும் புழுதி காரணமாக அண்மைக்காலமாக சிறு குழந்தைகளுக்கு தடிமல், காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட்டு வருவதாகவும் போகிற போக்கில் எங்களை இவர்கள் பலாத்காமாக விரட்ட வேண்டியதில்லை. நாங்களே விட்டுவிட்டு ஓட வேண்டி வரும் எனவும் தெரிவித்தார் ஒரு தாய்.

## மீன்பிடிக்கத் தடை

அமெரிக்காவின் குரலினது ''பாதுகாப்பு பிரதேசம்'' எனக்கூறி மீனவர்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் மீன்பிடிக்கக் கூடாது என்று விரட்டப்படுகின்றனர். சில இடங்களில் மீனவர்கள் இரண்டு பேருக்கு மேல் படகில் போகக்கூடாது என்றும் தடுக்கின்றனர். குறைந்தது தாங்கள் 5 பேராவது படகில் செல்ல வேண்டும் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இது பற்றி யாருக்கு விளங்கப் போகிறது. போதாததற்கு கடற்பரப்பை மீன்பிடிக்குக் கட்டுப்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளார்கள்' என்கிறார் ஒரு மீனவ இளைஞர்.

ஏற்கனவே அமெரிக்காவின் குரலின் 105 கிலோ வாட் சக்தி பயன்படுத்தப்பட்டுவரும் ஒலிபரப்பு நிலையம் ஏக்கலையில் அமைந்துள்ளது. அங்கு எந்தக் கெடுபிடியும் இல்லை. இந்த 413 ஏக்கர் பரப்பை கொண்ட 1500 கிலோ வாட் இரணவில 'அமெரிக்காவின் குரலுக்கு' மட்டும் ஏன் இவ்வளவு தேவை என்பது தொடர்பாக சந்தேகங்கள் எழுந்துள்ளது. யுத்த நடவடிக்கைகளுக்கும் இவை பயன்படுத்தப்படுமா என்ற சந்தேகம் வலுக்கத் தொடங்கியுள்ளது.



'அமெரிக்காவின் குரல்'

## கதிர்வீச்சுக்களால் ஆபத்து

அமெரிக்காவின் குரலுக்கான மின் சாரத்தைப் பெற ஐதரசன் வாயுவின் மூலம் உற்பத்தியாக்கப்படும் டியுட்டேரியம் மூலம் மின் உற்பத்தி செய்யப்படும் நிலையம் ஒன்று மாதம் பேவில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. கதிர்வீச்சுத்தன்மையுள்ள இம் மூலகத்திலிருந்து மின்சார உற்பத்தியின் போது வெளியேற்றப்படும் அல்பா, பீடா, காமா போன்ற கதிர்கள் கசிந்தால் பாரிய மனித அழிவுக்கு அப்பிரதேசம் இலக்காகும் என்று அச்சம் தெரிவிக்கின்றார் இப்பிரச்சினையில் அக்கறை காட்டிவரும் ஒரு விஞ்ஞான பட்டதாரி. அதற்கு உதாரணமாக அவர் ரஷ்யாவில் செர்னொபில் நகரத்தில் நடந்ததும் இதே போன்ற ஒரு நிகழ்வே என்று அடித்துக் கூறுகின்றார்.

## எழுகிற கேள்விகள்

எது எவ்வாறு இருப்பினும், பொதுவாக அச்சம் கொள்ள காரணமான சில நியாயமான கேள்விகள் இருக்கத்தான் செய்கின்றன.

1)அமெரிக்காவின் குரலை அமைக்க அமெரிக்கா இலங்கையை தேர்ந்தெடுக்க காரணம் என்ன?

2)ஏற்கனவே இலங்கைக்கு அண்மையில் உள்ள டியாகோ கார்சியாவில் பெரியதொரு 'அமெரிக்காவின் குரல்' நிலையம் ஒன்று இருக்க இலங்கையிலும் ஏன் நிர்மாணிக்க வேண்டும்?

3)அமெரிக்காவும் - இலங்கை அரசும் செய்து கொண்ட 'அமெரிக்காவின் குரல்' தொடர்பான ஒப்பந்தத்தில் சந்தேகம் கொள்ளும் மக்களுக்கு, அரசு தொடர்ந்து ஒப்பந்தத்தை வெளிப்படுத்த தயங்குவதேன்?

4) 'அமெரிக்காவின் குரல்' பரப்புக்குள் பிரதேசவாசிகளையோ அல்லது பத்திரிகையாளர்களையோ வரவிடாமல் தடுப்பது ஏன்?

5)அமெரிக்காவின் குரல் எல்லையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள உயர்ந்த வேலிகளுக்கு **மின் பாய்ச்ச பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. வேலிக்கு மின்சாரம் பாய்ச்சுமளவிற்கு அங்கு என்ன முக்கியமான வேலை நடக்கிறது? வெறும் ஒலிபரப்பு நிலையத்திற்கு ஏன் இத்தனை பாதுகாப்பு?**

**6)இதைவிட ஒரு செய்தி நிறுவன உப நிலையமொன்றுக்கு இத்தனை பெரிய பரப்பு நிலம் ஏன்?( இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கோ, ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிலையங்களுக்கோ கூட 10 ஏக்கர் பரப்புக்கு மேற்பட்ட நிலம் இல்லை.)**

இவ்வளவு வினாக்களும் அர்த்தமுள்ள வினாக்களாகவே இருக்கின்றன.

0 0 0

## அமெரிக்காவின் 'புதிய உலக ஒழுங்கு'

'அமெரிக்காவின் குரல் தொடர்பாக


பத்திரிகையாளரை அனுமதிக்க மறுக்கும் பொலிஸார்

# இலங்கை
# டியாகோ கா

**என். எஸ்.**

கொண்ட அமெரிக்
அங்கு இராணுவ
நிறுவியது.

## விமானந்தாங்கிக்
## மாறிய டியாகோ

அமெரிக்காவுடன்
வுகள் இல்லாத சீனா
திய கிழக்கு,
போன்ற நாடுகளுக்
தரக்கூடிய வகையி
**கார்சியா** தளம் உள்
அமெரிக்கா பெற்று
னேயே அத்தீவுவா
ருந்து விரட்டப்பட்ட

'4.8 கிலோமீற்றர்
கிலோமீற்றர் நீளமு
கொண்ட தென்னை
கிய தீவு பத்தே ஆ
**கடிக்கப்படாத விம**
**கப்பலாக** மாறியது
அமெரிக்க விமான

எந்த ஒரு உலக நாட்டவர் மத்தியிலும் நல்ல அபிப்பிராயம் இல்லை. உலக அரங்கில் ரஷ்யாவின் வீழ்ச்சியின் பின் பனிப்போர் (Cold War) முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின் உலக ஏகபோக தனி வல்லரசாக அமெரிக்கா உருவாகிவிட்டது. உலகில் அமெரிக்காவின் தலையீட்டுக்கு உட்படாத நாடுகள் குறைவே. பொருளாதார ரீதியில் தன்னில் தங்கி வாழச் செய்வதற்காக உலகின் ஏனைய நாடுகளை இராணுவ, அரசியல், பொருளாதார ரீதியில் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதே அமெரிக்காவின் 'புதிய உலக ஒழுங்கு' திட்டமாகும்.

சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் சபையும் இன்று அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது. பலவீனப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் இருக்கின்றமையால் அமெரிக்கா தனது நவகாலனித்துவ கொள்கைகளை தடையின்றி செயல்படுத்தக்கூடியதாக உள்ளது.

அமெரிக்கா இந்த அமெரிக்காவின் குரலை யுத்த காலங்களில் செய்மதி பரிவர்த்தனைகளுக்கும் தனக்கு சாதகமான வகையில் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்குமே பயன்படுத்தி வருகிறது. உலகில் இது வரை 13 'அமெரிக்காவின் குரல்' நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அப்படி அமைக்கப்பட்ட நிலையங்கள் யுத்தகாலங்களின் போது தாக்குதலுக்கும் உள்ளாகியிருக்கின்றன. எனவே தான் அவுஸ்ரேலியா, பிலிப்பைன்ஸ், இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் ஆரம்பத்தில் அமெரிக்காவின் குரலை அமைக்க திட்டமிடப்பட்ட போது அந்நாடுகள் அனுமதி தர மறுத்தன.

அதேநேரம் இலங்கைக்கு தென் மேற்காக 700 கிலோமீற்றர் தொலைவில் உள்ள **டியாகோ கார்சியா**வில் அமெரிக்காவின் குரலை அமைக்கவென்று 99 வருடங்களுக்கு பிரித்தானியாவிடமிருந்து 1960களில் குத்தகைக்கு பெற்றுக்

பல்கள் மற்றும் 'B-5
வீச்சு விமானங்கள்
ஆதார இராணுவத்
இன்று உள்ளது. பெரி
வசதிகள் பல கொ
வும் அமைந்துள்ளது.

## இலங்கையும்
## எதிர்த்திருந்தது

அமெரிக்கா குர
ளில் டியாகோ
அமைக்கப்பட்ட போ
ராவில் இருந்த
**இலங்கை உட்பட**
**அதனை எதிர்த்திரு**
**பிடத்தக்கது.**

சென்ற வருடம் மார்ச்
ரிக்கா உருவாக்கிய தி
இந்தியா போன்ற நா
தாவது தன்னை மீறி
யுத்த நடவடிக்கைக
இருக்க வேண்டும் எ
டது. இவ்வாறு அமெ
வத் தலைமையகமா
னின் DEFENCE PLA
DANCE எனும்
உள்ள விடயங்களை
டைம்ஸ் பத்திரிகை அ
தியது. (அமெரிக்க
மான காங்கிரஸ்ஸுக்
வறிக்கை சமர்
தில்லை என்பது
கது) இவ்வறிக்கையி
**வடகொரியா, ஈராக்**
அணு ஆயுதப்பரவ
மல் தடுக்கவும், பெரு
படுத்தக்கூடிய வேறு
உருவாகாமல் தடுக்க
பட்டால் அமெரிக்கா
வடிக்கையை பய
வேண்டுமென குறிப்
ளது. அந்தத் தாக்கு
நடத்தப்பட வேண்
விரிவாக திட்டமிடப்
இந்தியாவின் இராணு
ரங்களைத் தாக்கி அ
னப்படுத்துவது அ
இலக்கு. இதற்கு அமெ
படுத்த வேண்டிய ஆ
ரக க்ரூய்ஸ் ஏவுக

நன்றி - நூலகத்திட்டம்



-1971 இல்
தளத்தையே

கப்பலாக
கார்சியா

கமான உற
இந்தியா, மத்
க்காபிரிக்கா
அச்சத்தைத்
டியாகோ
து. இத்தீவை
கொண்டவுட
ளும் அங்கி
ர்.

கலமும் 6.4
மட்டுமே
மரங்களடங்
களில் மூழ்
ளந்தாங்கிக்
கெப்பெரும்
தாங்கிக் கப்


இந்து மகாகடலில் உள்ள டியாகோ கார்சியா அமெரிக்கா தளத்திலிருந்தே இந்த ஏவுகணைகளை அனுப்பிவிடலாம்.

கடந்த காலங்களில அமெரிக்கா, பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு இத்தீவில இராணுவப் பயிறசிகள் வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. அப்போது இந்தியாவுடனான அமெரிக்க வெளியுறவுக் கொள்கை சுமுகமாக இருக்கவில்லை.

ரஷ்ய-இந்திய ரொக்கெட் தொழில்நுட்ப ஒப்பந்தம் செய்யப்பட்ட போது அதனை செய்யக்கூடாது என கடந்த வருடம் அமெரிக்கா அச்சுறுத்தியிருந்தது. எனினும் ரஷ்யாவும் இந்தியாவும் அதனை அலட்சியப்படுத்தி ஒப்பந்தத்தை தொடர்ந்தன. எனவே அமெரிக்கா இரு நாடுகளுக்கும் சில தடையுத்தரவுகளைப் பிறப்பித்தது.

டுகிறது. இதற்கு முன்னர் திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்க போர்க்கப்பல்களின் எரிபொருள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பெரும் எண்ணெய்க் கிடங்கை அமைக்க இலங்கையிடம் அனுமதி கேட்கப்பட்டது. இருப்பினும் இலங்கை உடனடியாக பதில் கூறவில்லை. பின்னர் இத்திட்டம் கைவிடப்பட்டாலும், அமெரிக்கா திருகோணமலை துறைமுகத்தில் கொண்டுள்ள ஆர்வம் குறைந்தது என அர்த்தம் கொள்ளமுடியாது.

திருகோணமலைத் துறைமுகமானது இரண்டு உலக யுத்தங்களின் போதும் பிரித்தானியருக்கு அதிக அளவில் பலனளித்தது அறிந்ததே. 1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்ட போதும் திருகோ




VOICE OF AMERICA

# ...ர்சியாவாகிறதா?

**...குமரன்**

ரகசுண்டு
ங்கவல்ல
ாக இது
இராணுவ
தளமாக

அறு... க
சியாவில்
அணிசே
இந்தியா,
நாடுகள்
து குறிப்

ும் அமெ
த்தின்படி
எப்போ
ல் தனது
எவ்வாறு
திட்டமிட்
இராணு
பெண்டக
NG GUI-
க்கையில்
புயோர்க்
லப்படுத்
ளுமன்ற
கூட இவ்
கப்படுவ
பிடத்தக்
இந்தியா.
ானவை
ஈடுபடா
ழிவு ஏற்
யுதங்கள்
தேவைப்
ணுவ நட
டுத்தவும்
பட்டுள்
எப்படி
மனவும்
ள்ளது.
கேந்தி
து பலவீ
முதல்
ா பயன்
கள் 307
ளாகும்.

அதேவேளை அமெரிக்கா இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கடந்த காலங்களில் பாகிஸ்தானைப் பயன்படுத்தி வந்தது. தற்போது கிளின்டன் நிர்வாகம் ஆட்சிக்கு வந்ததன் பின் பாகிஸ்தான் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை பரிசீலனைக்குட்படுத்தப்படுகிறது. எனினும் இந்தியாவுடனான உறவுகளில் கொண்டுள்ள கொள்கையில் பெரிய மாற்றமொன்று இல்லையென்பது ரஷ்யா இந்திய தொழிநுட்ப ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் விட்டுக் கொடுக்காமையும் அதே வேளை ரஷ்யா ஒப்பந்தத்தில் கடந்த சில காலமாக அலட்சியப்படுத்தி வருவதிலிருந்தும் விளங்கக்கூடியதாக உள்ளது.

## குட்டி அமெரிக்காவாகிறதா?


இவ்வாறு அமெரிக்கா தென்னாசியப் பிராந்தியத்திலும் தனது தளங்களை விஸ்தரிப்பு செய்து வரும் சூழ்நிலையிலேயே இலங்கையிலும் துரிதமாக அமெரிக்காவின் குரல் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து வருகின்றன.

அதற்கேற்றாற் போல் தடைசெய்யப்பட்ட கட்டுப்பாட்டு பிரதேசமாக இரணவில அமெரிக்காவின் குரல் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஒரு **குட்டி அமெரிக்கா** என குறிப்பிடத்தக்க அளவு யாரும் தலையிட முடியாத, உள்ளே நடக்கும் விடயங்களை அறிய முடியாத பிரதேசமாக இது உள்ளது. அணிசேராக் கொள்கையை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டே இலங்கை 1981 அக்டோபரில் அமெரிக்கா கடற்படைச் சக்திகளுக்கு 'ஓய்வு தளங்களை' அளிக்கப் போவதாக அறிவித்தது.

## ஜே.ஆர். காலத்திலேயே ஒப்பந்தம் கைச்சாத்தானது

அதன் பின் ஜே.ஆரின் ஆட்சியின் போதே(1983இல்) அமெரிக்காவின் குரலுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அறியப்ப

ணமலைத் துறைமுகத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே பிரித்தானியர் வைத்திருந்தனர். பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போதே அது அகற்றப்பட்டது. திருகோணமலைத் துறைமுகம் இந்துப் பெருங்கடலிலேயே மிகச் சிறந்த இயற்கைக் கப்பல் துறைமுகம் என்பது சர்வதேசக் கணிப்பு. இதனைப் பெற அமெரிக்கா நீண்ட காலம் முயன்று வந்துள்ளது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது திருகோணமலைத் துறைமுகம் இந்துப் பெருங்கடலின் வழியாக தொலைகிழக்கிற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் செல்லும் முக்கிய கடல் மார்க்கங்களில் பிரிட்டிஷ் கடற்படைத் தளமாகப் பயன்படுத்தப்பட்டது தெரிந்ததே. 'இலங்கை அமெரிக்காவுக்கு திருகோணமலைத் துறைமுகத்தை வழங்கும், விமானந் தாங்கிக் கப்பல்கள் வரும், நவீனமய்மாகும் என உலக நாடுகள் நம்பியிருந்தன எனினும் அது நிறைவேறவேயில்லை'.




இரணவிலவில் எழுப்பப்பட்டு வரும் வேலைகள் தொடர்பான சந்தேகத்திற்குரிய கேள்விகள் இந்த வகையில் எழுந்தவையே.

ஒரு வேளை யுத்த காலம் ஒன்று வந்தால் அமெரிக்கா இச் செய்தி நிறுவனத்தை யுத்த செய்தி தொடர்புகளுக்கும் தனது பிரச்சாரத்துக்கும் பயன்படுத்தும் என்பது நிச்சயம். அப்படியாயின் ஏனைய நாடுகளுடன் பகைத்துக் கொள்ளும் நிலை இலங்கைக்கு ஏற்படும். சில வேளை தாக்குதல்களுக்கும் இலக்காக நேரிடலாம். தாக்குதல்களுக்கு ஒரு போதும் இலக்காக மாட்டாது என அமெரிக்காவால் உத்தரவாதப்படுத்த முடியாது.

தென்னாசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான அமையம் (SAARC) அண்மைக் காலமாக பிராந்திய, பொருளாதார, சமூக, அரசியல் ஒப்பந்தங்களை செய்து ஐக்கியத்தையும் அபிவிருத்தியையும் தொடர்ந்து வரும் இவ்வேளை பிராந்திய நாடுகளுடனான உறவுகளையும் இலங்கை இழந்துவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அமெரிக்ககாவின் குரல் நிர்மாணம் தொடர்பாக இந்தியா தொடர்ந்தும் எதிர்ப்பையே காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

பிரதேச மக்கள் ஒன்றிணைந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தி வந்தார்கள் எனினும் கடந்த யூலை மாதம் 23ம் திகதி ஊர்வலம் நடாத்திய போது ஆயுதந்தாங்கிய படையினர் வண்டிகளில் வந்திறங்கி பாதைகளை அடைத்து நிறுத்தியதுடன், ''மேலும் தொடர்ந்தால் சுட்டுத் தள்ளவும் மேலிடத்திலிருந்து ஆணை வழங்கப்பட்டிருப்பதாகத்'' தெரிவித்தனர்.

இரணவில பிரதேசவாதிகள், கத்தோலிக்க மதத் தலைவர்கள், ஏனைய மதகுருமார்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் சேர்ந்து 'அமெரிக்காவின் குரல்'இன் இந்த நிர்மாண வேலைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஆயினும் அமெரிக்கா - இலங்கை அரசு ஒப்பந்தத்தில் நடக்கும் இந்த நிர்மாணத்தை எதிர்த்து இவர்கள் நடாத்தும் போராட்டம் எந்தளவுக்கு பயனுள்ள தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் செயலாளர் எச்.ஜே.விஜேதாச சென்ற ஆண்டு பெப்பிரவரி 2ம் திகதி சிலாபம் பிரதேச ஆயருக்கு அனுப்பிய கடிதத்தில் ''அமெரிக்காவின் குரல் தொடர்பாக அச்சம் கொள்ளத்தேவையில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி சூழலுக்கோ, சமூக, கலாசாரத்துக்கோ, சுகாதாரத்துக்கோ எவ்வித இடைஞ்சலும் ஏற்பட இடமில்லை'' என தெரிவித்திருந்தார்.

அதேபோல் செப்டம்பர் மாதம் 2ம் திகதி 'அமெரிக்காவின் குரல்' பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கையில் ''இராணுவ ரீதியான பணிகள் எதனையும் செய்யப் போவதில்லை. எமது பணிகளால் மனிதர்களது சுகாதாரத்துக்கோ, சூழலுக்கோ எவ்வித தீங்கும் ஏற்படப் போவதில்லை. யாருடைய பிழைப்பையும் பாதிக்காது. 6கோடி டாலர் நிர்மாணச் செலவுகள் ஏற்படும் அதில் 2.5 கோடி டாலர் உள்நாட்டு நிர்மாணச் செலவுகளுக்கு ஆகும். அதனை அமெரிக்க அரசு ஏற்கும். பிரதேசவாசிகள் போன்றோர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர்'' எனவும் அறிவித்திருந்தது.

எனினும் நடைமுறையில் இவை யாவும் தலைகீழாகவே உள்ளன. ஒரு பக்கம் மரநடுகைக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டுவரும் அதே நேரம் மறுபக்கம் வருமானம் தரும் ஆயிரக்கணக்கான தென்னைமரங்கள் அமெரிக்காவின் குரல் நிர்மாணப்பணி எனும் பேரில் வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. சூழலும் சுகாதாரமும் பாதிப்படைய இதனை விட வேறென்ன வேண்டும். 'அமெரிக்காவின் குரல்' பிரதேசத்துள் வெளியார் அனுமதிக்கப்படுவதில்லை என்பது அனுபவபூர்வமாக அறிந்த உண்மை.

இதேநேரம் சிலாபப் பிரதேச ஆயர் உட்பட கத்தோலிக்க மதகுருமார் எல்லோரும் இதற்கு எதிராக கருத்தரங்குகள், கூட்டங்கள் மூலம் பிரச்சாரப்படுத்தியும் ஊர்வலங்கள் நடாத்தியும் தங்கள் எதிர்ப்பை காட்டி வருகின்றனர். செடக் நிறுவனம் போன்றன இதற்கு முன்னின்று உழைக்கின்றன்.

இது இவ்வாறிருக்க ''பிரதேசவாசிகளின் குடியிருப்புக்கள் அமெரிக்காவின் குரலின் நிர்மாணத்திற்குட்படாது. ஹோட்டலோ, விமான நிலையமோ அமைக்கப்படமாட்டாது. சூழலுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது'' என சிலாபம் மாவட்ட பா.உறுப்பினரும் அமைச்சருமான ஹெரால்ட் ஹேரத் டெய்லி நியூஸில் (ஜூலை 27) தெரிவித்துள்ளார்.

அவர் 19ம் திகதி யூன் மாதம் இரணவிலவுக்கு விஜயம் செய்தபோது ''உங்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படப்போவதில்லை; வீதி அகலமாக்கப்படும்போது யாருக்காவது இடத்தை விட்டு வெளியேற வேண்டி ஏற்படின் அதற்குண்டான செலவை நாங்கள் தருகிறோம். உங்களுக்கு லைட் வேண்டாமா'' எனவும் கேட்டிருக்கிறார்.

அதற்கு பதிலளிக்கு முகமாக பிரதேசவாசியொருவர் **''உங்களுக்கு நாங்கள் வாக்களித்தது எங்களுக்கு சேவை செய்வதற்காகவே. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் அதே நேரம் எங்களுக்கும் வழங்குங்கள். அவ்வசதியை பெற அமெரிக்காவின் குரலோ ஹோட்டலோ தான் இங்கு அவசியமென்பதில்லை. எங்கள் பிள்ளைகளுக்கு 'எயிட்ஸ்ஸை' விட குப்பிலாம்பு வெளிச்சமே போதுமானது''** எனக் கூறினார்.

இவ்வாறு எதிர்ப்புகள் இருந்த போதும் அமெரிக்காவின் குரலிற்கு ஆதரவாக அரசின் தொழிற்பாடுகளும் தொடர்ந்தே வருகின்றன.

அரசு இவை எல்லாவற்றையும் மூடிமறைக்க முயற்சி செய்வதற்கான காரணம் ஒப்பந்தத்தின் மூலம் அரசு சம்மதமளித்துள்ள விடயங்கள் அம்பலமாகிவிடும் என்பதாலும் அமெரிக்காவிற்கு எதிராக செயலாற்ற இலங்கை அரசு தயாராக இல்லாததனாலும் என்றே சந்தேகிக்கப்படுகிறது.

நன்றி - நூலகத்திட்டம்





# மறையாத மறுபாதி: புகலிடங்களில் பெண்நிலைவாத எழுச்சி

மல்லிகா சிவகடாட்சரம் எம்.ஏ.

புகலிட இலக்கியத்தின் முக்கிய முனைப்பொன்றின் வடிவமாகச் சமீபத்தில் ஒரு கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. பதினெட்டுப் பெண்களது நாற்பத்தியெட்டுக் கவிதைகளைத் கொண்ட இத்தொகுதி 'புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு' என இனங் காட்டிக் கொண்டு, **மறையாத மறுபாதி** என இலக்கிய அரங்கிற் காலடி பதித்துள்ளது.

1986 இல் யாழ்ப்பாணத்தில் வெளியான **சொல்லாத சேதிகள்** தொகுப்பின் பின்னர், பிரான்ஸ் நாட்டிலிருந்து பிரசுரமாகியுள்ள இம் மறையாத மறுபாதியே இலங்கைப் பெண்கவிஞர்களின் இரண்டாவது கவிதைத் தொகுதியாகும்.

இத்தொகுதியிலுள்ள பெரும்பாலான கவிதைகள், **சக்தி,நமது குரல், தூண்டில், கண், ஓசை, மனிதம்**, புதுமை போன்ற புகலிட சஞ்சிகைகளில் வெளிவந்தவை, இவை தவிர 1990 ஆம் ஆண்டு முதல் ஜேர்மனியில் பெண்கள் நடத்துகிற 'பெண்கள் சந்திப்பை' ஒட்டி வெளியிடும் பெண்கள் சந்திப்பு மலரில் பிரசுரமான சில கவிதைகளும் இத் தொகுதியில் அடங்கியுள்ளன.

இக்கட்டுரையில் எனது அக்கறை, மறையாத மறுபாதியின் கவிதைகளின் பாடத்தை நுணுகி விமர்சனம் செய்வது அல்ல; இத்தொகுதியை அறிமுகம் செய்வதும், இத்தகைய பெண்நிலை இலக்கியக்குரல்கள் எழுகின்ற பின்னணியாகிய, புலம் பெயர்ந்த நாடுகளில் பெண்கள் எதிர்கொள்ளும் நிலைமைகள் அவை தொடர்பாக அவர்களது எதிர்வினைகள், செயல்வாதம் ஆகியவை பற்றிச் சில கருத்துக்களைக் கூறுவதுமாகும்.

இன்று புலம்பெயர்ந்து, மேற்கைரோப்பாவிலும் ஸ்கன்டிநேபிய நாடுகளிலும், கனடாவிலும், அவுஸ்ரேலியாவிலும் குடியேறியுள்ள தமிழ்ச் சமூகத்திடையே பெண்களின் தொகை கணிசமாக அதிகரித்து வருகிறது. ஆரம்பத்தில் மிகக் குறைந்தளவு பெண்களே புலம் பெயர்ந்தனர். பின்னர் புலம் பெயர்ந்த ஆண்களின் சகோதரியர், அவர்களுக்கான மணப்பெண்கள் எனப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தது. தனியாகச் சென்ற பெண்களும் உள்ளனர்.

உலகில் பெண் விரோதக் கலாசாரம் என்று கூறக் கூடியவற்றில் தமிழர் கலாச்சாரமும் ஒன்று. இலங்கையில் இருப்பதைவிடப் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இக் கலாசாரத்தைக் தமிழர் சமூகம் கட்டிறுக்கமாக வைத்துக் கொள்ள விரும்புகிறது. பெண்களது நடைமுறைகள், விவாகம் ஆகியவை தொடர்பாக எதேச்சாதிகாரப் போக்குடன் நடந்து கொள்ள முனைகிறது. ஆண்,பெண்ணைப் பொறுத்தவரை இரட்டை விழுமியங்களும், மனோபாவமும் கொண்ட தமிழ்ச் சமூகத்தின் இந்தப் போக்கு புலம்பெயர் நாடுகளில் இன்னும் இறுக்கமடைகிறது.

இந்நாடுகளின் கலாசாரங்கள், அவற்றில் காணப்படும் சில ஜனநாயக அம்சங்கள், பெண்களுக்கு சட்டபூர்வமாக அளிக்கப் பட்டுள்ள உரிமைகள், வசதிகள், வலிமை வாய்ந்த பெண்கள் இயக்கங்கள், இவற்றை அறிந்து கொள்ளத் தமிழ்ப் பெண்களுக்குள்ள வாய்ப்பு ஆகியவற்றைத் தமிழ்ச் சமூகம் காணுகிறது. மேலும் பெண்கள் கணவரிலோ, ஆண் உறவினரிலோ தங்காமல் தமது உழைப்பு, அல்லது அரசு தரும் சமூகநல உரிமை பணம் முதலியவற்றால் பொருளாதாரரீதியில் தனி அலகாக இயங்கக்கூடிய நிலை என்பவை, பெண்கள் தமது கையை மீறிப் போய்விடுவரோ என்ற பயத்தையும் ஏற்படுத்துகின்றது.

திருமண விளம்பரங்களில் 'நற்பண்பும் குடும்பப் பாங்கும்' கொண்ட பெண்களை வேண்டுவது நியதியாகி விட்டது. எல்லா மணமகன்களும் அவர்களது பெற்றோரும் இத்தகைய பெண்களையே விரும்புகின்றனர். ஆனால் வெளிநாட்டில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேடும் போது இது மேலும் அழுத்தம் பெறுகிறது. **நற்பண்பும், குடும்பப்பாங்கும்'** என்ற இச்சொற் தொடர்களைக் கட்டுடைத்துப் பார்க்கும் போது அவற்றுள் ஓர் ஆணாதிக்க உலகமே விரிந்து வருகிறது. வாழப் போகும் நாட்டில் பணம் உழைக்கக் கூடியவளாகவும் அதேசமயம் இந்துக் கலாசாரம் கொண்டவளாகவும் பெண்ணை எதிர்பார்த்தல் வழமையாகிவிட்டது.'' யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உயர்வேளாள இந்து USA PHD மணமகனுக்கு மணமகள் தேவை. மணப்பெண் வடஅமெரிக்காவில் நிரந்தர தொழில் புரிபவரும் இந்து கலாசாரமுடையவருமாய் இருத்தல் வேண்டும்'' என்ற வகையான விளம்பரங்கள் எமது ஞாயிறு பத்திரிகைகளை நிறைக்கின்றன இந்த விளம்பரங்களிற் காணப்படும் சாதிவாதமும் பால்வாதமும் குறிப்பிடற்குரியது.

எத்தனையோ சமூக, ஜனநாயக இயக்கங்கள், போராட்டங்கள், கலைவிஞ்ஞான வளர்ச்சிகளைக் கண்ட நாடுகளில் வருடக்கணக்காக வசித்தாலும் தமது மூடுண்ட, மேலாதிக்க மனப்பான்மையை தமிழ்ச் சமூகம் இன்னும் கைவிட்டு விடவில்லை என்பதற்கு இத்தகைய திருமண விளம்பரங்கள் சிறந்த உதாரணங்களாகும்.


இத்தகைய தமிழ்ச் சமூகச் சூழலிலேயே பெண்கள் வாழுகின்றனர். புலம் பெயர்ந்தவளாக, கறுப்பராக, தொழிலாளியாக வாழும் பெண் தனக்கு மேல் திணிக்கப்படும் 'தமிழ்ப் பெண்', 'அவளது கலாசாரம்' என்ற ஒரு கருத்து நிலையையும் சேர்த்து எதிர்நோக்க வேண்டியுள்ளது. இத்தகைய நிலையிலிருந்து சற்றாவது பெண்கள் விலகுகிறார்கள் என்ற சந்தேகம் ஏற்படும் போது அது பெண்களுக்கு எதிரான வன்முறைகளாக வடிவம் கொள்கின்றது. மனைவியரை, புதல்வியரை, சகோதரிகளை அடிக்கின்ற, ஏசுகின்ற நிலைமை தொட்டு, பொது இடங்களில் கூட்டாகப் பெண்களைக் கேலி பண்ணுகிற, துன்புறுத்துகிற நடவடிக்கைகளாக இவை விரிவடைகின்றன. சமீபத்தில் கனடா ரொறன்ரோ நகரில் பெண்களுக்கு எதிராக அதிகரித்துவரும் வன்செயல்கள் பற்றி அங்குள்ள விழிப்பு என்னும் பெண்கள் அமைப்பு கண்டனம் செய்தது; அது தொடர்பாக சமூகத்தின் உணர்வைத் தூண்ட முனைந்தது. இவ்வமைப்பு வெளியிட்ட பிரசுரம் ஆண்களது வன்முறைக்குச் சாட்சியாகச் சில சம்பவங்களையும் விபரித்திருந்தது. (வன்முறையை நிறுத்துக என்ற தலைப்பிலான இப்பிரசுரம் பெட்டிச் செய்தியாக பிரசுரமாகிறது) ஆணாதிக்க அடக்குமுறையைப் புலம்பெயர் பெண்கள் திரண்ட வடிவில் அனுபவிக்கின்றனர் என்பதை விட அகதி வாழ்வின் பொதுப்பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். தனிமைத்துயர், மொழி,கலாசாரத்தளங்களில் அந்நியத்தன்மை, நிறவாதம் ஆகியவற்றின் பல பிரச்சினைகளுக்கும் இவர்கள் ஆளாகின்றனர்.

புலம்பெயர்ந்த சமூகத்தில் பெண்களது பிரச்சினைகள் குறித்து பெண்களே சிந்திக்கவும் செயலாற்றவும் துணிந்ததைக் காணலாம். இத்துணிவு வெவ்வேறு நாடுகளில் பெண்கள் அமைப்புக்களாகவும், பெண்கள் சந்திப்புக்களாகவும், நூல், சஞ்சிகை வெளியீடுகளாகவும் தன்னை இனங் காட்டுகிறது. பிரான்சில் இலங்கை மகளிர் சங்கம், ஜேர்மனியில் பெண்கள் வட்டம், நோர்வேயில் சக்தி குழு, கனடாவில் விழிப்பு என அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. கண், நமது குரல், சக்தி, ஊதா என சஞ்சிகைகள் பெண்களால் வெளியிடப்பட்டன. தற்போது கண், நமதுகுரல் ஆகியவை நின்று போயினும் அவை பதித்த சுவடுகள் மறைந்து விடவில்லை. இவை தவிர ஜேர்மனியில் சில வருடங்களாக நடைபெறும் பெண்கள் சந்திப்பு எனும் நிகழ்ச்சியை ஒட்டி பெண்கள் சந்திப்பு மலர் எனப் பிரசுரம் வெளியிடப்படுகிறது. இவை யாவும் பெண்கள் தமது பிரச்சினைகளை அடையாளங்காணவும், அவை குறித்து செயற்படவும் தொடங்கியமைக்கு சாட்சியங்களாகும். சக்தி சஞ்சிகையின் முதலாவது இதழ் தனது வருகையின் நோக்கம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

> **''வெளிநாடடில் தமிழரிடையே பலவிதமான சங்கங்கள்,ஸ்தாபனங்கள் காணப்படுகின்றன. இவை பொதுவாக ஆண்களால் ஆண்களுக்காக நடத்தப்படுகின்ற அமைப்புக்களாகவே இயங்கி வருகின்றன. இவை பொதுவாக ஆண்களின் கருத்துக்களையும், கண்ணோட்டங்களையும் ஆண்களின் பார்வையில் பெண்களின் பிரச்சினைகளையும் தெரிவிப்பனவாயே உள்ளன.** புகுந்த நாட்டில் புதிய மொழி, கலாசார, வாழ்க்கைச் சூழலில் வாழ வந்திருக்கும் பெண்கள் இங்கு முகம்கொடுக்க நேரும் பிரச்சினைகளோ பல. 'புகுந்த நாட்டிலும் கூட பிறந்த நாட்டில் வாழ்வது போலவே வாழ வேண்டும்' என்று நிர்ப்பந்திக்கும் புலம் பெயர்ந்த தமிழர் சமூகத்திற்கும் 'இங்கு வாழும் வெளிநாட்டார் வித்தியாசமாக வாழக் கூடாது' என எதிர்பார்க்கும் புகுந்த நாட்டின் இனவாதப் போக்கிற்கும் இடையில் அல்லற்படுவதும் கூடப் பெண்களே. ஏனெனில் தமிழ்ச் சமூகத்தின் பெண்பாகுபாட்டு விதிகளில் ஒன்று 'தமிழ்க் கலாசாரத்தைப் பெண்களே பேண வேண்டும் ஆண்களுக்கு அந்தக் கடப்பாடு இல்லை'
>
> இத்தகு கலாசார முரணில் சிக்குப்பட்டுப் பெண்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதும் அவற்றுக்கு ஏதாவது தீர்வு காண்பதும், பெண்கள் மீதான பாகுபாடு பற்றி விழிப்புணர்த்துவதும் அதற்கெதிராகச் செயற்படுவதன் முதற்படியாக அவர்களிடையே ஒருங்கிணைப்பை, நடபை ,ஒற்றுமையை உருவாக்க ஒரு களம் அமைத்துக் கொடுப்பதும் 'சக்தியின்' பிரதான நோக்கமாகும்''

இவ்வாறு தமது பிரச்சினைகளை உணர்ந்து கொண்டு அவற்றுக்கு முகங்கொடுக்கும் வகையில் பெண்கள் இயங்கத் தொடங்கியுள்ளனர். இதே சமயம் இலங்கையில் பெண்நிலைச் செயல்வாதத்திற்கும் புலம்பெயர்ந்த பெண்களின் நடவடிக்கைக்குமிடையே காணப்பட்ட மானசீகமான தொடர்பையும் குறிப்பிடல் வேண்டும். இலங்கையில் வெளிவந்த சஞ்சிகைகளின் சில ஆக்கங்களை புகலிடத்துப் பெண்கள் தமது சஞ்சிகைகளிலும் பிரசுரித்தனர்; படித்துக் கருத்துரைத்தனர்.

இந்நிலைமைக்கு ஒரு இலக்கியப் பின்னணியும் இருந்தது. அது எண்பதாம் ஆண்டுகளில் ஈழத்துத் தமிழிலக்கியத்தில் தோன்றிய சமூகம் பற்றிய பெண்நிலைப் பார்வை; இதுவும் இலக்கியத்தில் ஒரு புதிய முனைப்பாகவே தோன்றிற்று. தமிழ் இலக்கியத்தின் பொருட் பரப்பை இது விசாலித்தது மாத்திரமன்றி புதிய அனுபவத் தளங்களையும் அறிமுகப்படுத்திற்று. பெண்ணாக இருப்பதாலேயே கண்ணில் படக்கூடிய, கருத்தில் உறுத்தக்கூடிய சில யதார்த்தங்களை ... பார்வை எடுத்துக்காட்டியது மாத்திரமன்றி சமூகத்தில் நிலவுகிற பால் அசமத்துவம், ஆணாதிக்கம் ஆகியவை பற்றிப் பலமான வினாக்களை எழுப்பியது. இது, இக்காலத்தில் பல்வேறு காரணங்களால் தமிழ்ப் பெண்கள் மத்தியில் தோன்றிய விழிப்புணர்வு, பெண்நிலை நோக்கு, பெண் இயக்கங்கள் ஆகியவற்றின் இலக்கிய நிலையிலான வெளிப்பாடுகளானது. இந்த முனைப்பின் திரண்ட வடிவிலான குறியீடு போலவே 'சொல்லாத சேதிகள்' கவிதைத் தொகுப்பு வெளியானது. இப்போக்கின் ஒரு தொடர்ச்சியையும் மறையாத மறுபாதியின் பதிப்புரையில் சரியானபடி அடையாளம் காட்டியுள்ளார் பதிப்பாசிரியர். இத்தகைய ஒரு பின்னணியில்தான் மறையாத மறுபாதி தொகுதியை நோக்குதல் வேண்டும்.



நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு சிட்டுக்குருவி அல்லது அணிற்குஞ்சு

அ.ரவி



-உ-

மாலை உச்சியிலிருந்து சரிந்து விட்டது. சாடையான மப்பாக இருந்தது வானம். இனி றோட்டால் போக இயலாது. ''புளியடிச் சந்தியிலை ஆமி கொஞ்சம் கரைச்சல்'' என்றார்கள். ஒழுங்கைகள் தான் தஞ்சம். மழை பெய்யப் போவதில்லை.இப்படியே மந்தாரம் தான். வேளைக்கு இருட்டிவிட்டாற் போல் ஒரு திகில்.

நெற்கள் கதிர் வைக்கத் தொடங்கின. இளமையான நெல்லின் மணம் மூக்கைத் தடவியது. வயலுக்குள் வெள்ளம். சாடையான காற்றில் அசைந்தாடியது நெல். வயலே ஒரு பக்கம் சரிந்தாற்போல அலைஅலையாக மிதந்தன. கண்ணுக் கெட்டிய வரைக்கும் பச்சை. இடையிடை சிறு குளங்கள்.

ஒரு சின்னப் பிள்ளையார் கோயிலைத் தாண்டி ஒழுங்கையால் திரும்பினர். புறாக்கள் குறுகுறுத்துப் பறந்தன. கட்டை அடித்த மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. பரந்த சின்னப் புல்வெளி. சிறு பிள்ளையார் எண்ணெய் வழவழப்புடன் மரத்தின் கீழ் இருந்தார். முன் சிறு விளக்கு. ஒரு பக்கம் சரிந்து தீபம் தெரிந்தது. இடையில் சிறு பட்டுத் துணி. அருகில் பெரிய மரங்கள். ரம்மியமான பிரதேசம்.

ஒழுங்கையால் திரும்பிய போது தூரத்தில் ஒரு பெண் குடத்துடன் வருவது தெரிந்தது. நெருங்க, நெருங்க அது சுபாவாக இருக்குமோ என்று சந்தேகம். அவளின் சீவியமும் இந்தப் பக்கம் தான். சுபாதானோ?

இல்லை இது வெறும் பிரமை. இன்னும் சுபாவின் மயக்கம் தீரவில்லை.

இல்லை ; இது சுபாதான். சுபா குடத்துடன் போவாளா? கம்பஸில் படித்தவள்; எங்கேயோ ரீச்சராக இருக்கிறாள். ரீச்சராக இருப்பவள் குடம் தூக்கக் கூடாதா?

இது சுபா தான்; நெஞ்சு ஒரு முறை அதிர்ந்தது.

நெருங்கிய போது அவள் இவர்களைக் கவனிக்கவில்லை.இவன் சடக்கென ''பிரேக்'' போட்டான். அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''ஹலோ சுபா'' என்றான்.
''நீங்களா?..பயந்திட்டன்''..என்றாள்.
அந்நியமாகிப் போனாள். நெற்றியிலும் உச்சியிலும் குங்குமம். கன்னம் இரண்டு பக்கமும் விரிந்து மினுங்கியது. வயிறும் கொஞ்சம் பெருத்து இருந்தது.

''எப்படி இருக்கிறியள்?'' என்றாள்.
''பார்க்கத் தெரியலையோ?...வியாபாரம் செய்யிறன்..வேலை இல்லைத்தானே..இதிலை இறங்கியாச்சு..''
''எப்படி..எப்படி''? விழியால் வியந்து கொண்டு போனாள்.''மெலிஞ்சு கறுத்துப் போனியள்..'' என்று முணுமுணுத்தாள்.
''சீ..''என்று சிரித்தான். ''உனக்கு...உங்களுக்கு கிட்டத்தானே வீடு...? ஏதோ கேட்க வேணும் போலக் கேட்டான். அந்நியமாகித் தான் போனான்.
தலையைக் குனிந்து ''உனக்கு என்டே சொல்லலாம்...'' முணுமுணுத்தாள். ''உந்த வீடு தான்...'' என்றாள். ''வீட்டை வாங்கோவன்...'' கேட்டாள்.
''இல்லையில்லை... அவங்கள் பார்த்துக் கொண்டு நிக்கிறாங்கள்..பொழுது படுகிறத்துக்கிடையிலை கிளிநொச்சிக்குப் போகவேணும்...''
''...............''
''எல்லாத்தையும் சொல்லாமல் செய்து போட்டியள்..நான் மூண்டாவது ஆளா ஆரோ சுபாவுக்கு கலியாணம் எண்டு சொல்லி அறிய வேண்டி இருக்குது...''என்றான்.

''சத்தியமா இல்லை... நான் இரண்டு மூன்று. தரம் கம்பசுக்கு உங்களைத் தேடி வந்தனான். கலியாணம் சொல்ல மாத்திரமில்லை. உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணுமெண்டும்...'' குனிந்து தான் சொன்னாள். நிமிர்ந்தால் கண் கலங்கி இருந்தது தெரிந்திருக்கலாம்.

''நீங்கள் எப்படி இருக்கிறியள்?'' என்று கேட்டாள்.
''இருக்கிறன்.. நீங்கள் என்னை ஒரேயடியா மறந்து போனியள் போல..'' என்றாள்.

''ஓம் மறந்துதான் போனன். ஒரேயடியா இல்லை, எனக்குப் பிரச்சினை கூடிப் போச்சுது சுபா... நான் அரசியலை விட்டுட்டன். நீங்கள் முந்திக் கேட்டியள். எல்லாம் முடிஞ்சாப் பிறகு இப்பதான் விட்டன். விட்டுட்டன் என்று சொல்ல ஏலாது. விடப் பண்ணிப் போட்டாங்கள். குடும்பத்திலும் ஞாயமான பிரச்சினை மைச்சானும் செத்துப் போனார். அக்காவும் வீட்டோடை...''

''எப்ப இது நடந்தது?...''
''நாலைந்து மாதத்திற்கு முன்னம். ஷெல்லடிச்சு... நாலு பிள்ளைகளும் அக்காவும்.. தங்கச்சிமாரும் வீட்டோடை தானே..பிரச்சினை கூடிட்டுது..''
''நானும் உங்களுக்கு பிரச்சினை தந்திட்டன் போலை..''
''சீச்சீ... அப்படியில்லை. ஒரு அதிர்ச்சிதான். இப்பவும் நம்ப முடியாமல்...எட்டி உங்கன்ரை கையைப் பிடிக்கட்டோ எண்ட மாதிரி.. நீங்கள் என்னுடையவள் எண்டுதான்... வேண்டாம் சுபா. ஒண்டும் கதைக்காதையுங்கோ..நீங்கள் எப்பவும் நீங்களாக இருங்கோ... அவங்கள் பார்த்துக் கொண்டு நிக்கிறாங்கள். நான் வாறன்..பிறகு நேரம் கிடைச்சால் வருவன்.''
''கட்டாயம் வருவீங்களா?'' என்று கண் கலங்கி நிமிர்ந்தால். குரல் தளதளத்தது.

''வாறன் கட்டாயம் வருவன்...''
சடக்கென்று கையை எட்டிப் பிடித்தாள். உடனே விட்டாள்.
''உங்களை நான் நல்லாய் விரும்பிறன்...'' என்றாள்.
''போட்டு வாறன்...''என்றாள்.
''ஆர்?...'' என்றான், காத்துநின்ற பாஸ்கரன்'' என்னோடை படிச்ச பிள்ளை..''என்றான் இவன்''. கலியாணம் முடிச்சிட்டுது போலை..'' என்றான் பாஸ்கரன். கையைப் பிடித்ததைக் கண்டானோ? இவன் நிமிர்ந்து பார்த்தான்.

எட்டிப் பிடித்த போது அவளின் கை சுட்டது.
''உங்களை நான் நல்லாய் விரும்பிறன்..''என்றாள். இதற்கு என்ன அர்த்தம்? ஒரு கலியாணம் முடித்த பெண் சொல்லக் கூடாத வார்த்தை இது:
சொல்கிறாள். என்ன அர்த்தம்?
வேண்டாம் சுபா. இது கொஞ்சம் அதிகபட்சமான வசனம். நீ உன் புருஷனுக்கு நேர்மையானவளாக இரு. உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு உண்மையான தாயாக இரு. பெற்றோருக்கு கீழ்ப் படிந்த பெண்ணாக இரு. பழைய கனவுகளை மறந்து விடு. கனவாக மறந்து விடு. கம்பசில் படித்து பட்டம் பெற்றது போல இதையும் ஒரு அனுபவமாக எறிந்து விடு.

காலையில் எழுந்து குளி. சமை. வேலைக்குப் போ. மாணவர்களை உன் பிள்ளையாக நேசி. மாலையில் கணவனுடன் கை கோர்த்தபடி உலாத்து. கணவனைக் காதலி. அருமையான வயல் வெளி உண்டு. ரசி. புறாக்கள் குறுகுறுத்துப்பறப்பதைப் பார். கொக்குகள் விண்ணென்று இறங்குவதைப் பார். இளமையான நெல்லின் மணத்தை நுகர். கொஞ்ச இளங்கதிர்களை வாய்க்குள் போட்டு மென்று அதன் இளம் பாலை ருசி. மருத நிலத்துச் சின்னப் பிள்ளையாரிடம் போ. விளக்கேற்றி கும்பிடு. பிறக்கப் போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசி. இரவில் கணவனின் நெஞ்சில் சுகமாக நித்திரை தூங்கு. போ.

''உங்களை நல்லாய் நேசிக்கிறேன்'' என்று சொல்லாதே; அது கூடாது. முன்னர் காதலித்த போது அதைச் சொல்லியிருக்கலாம். சொன்னாய் தான். இன்னும் அழுத்திச் சொல்லியிருக்கலாம். கையைப் பிடித்தபடி, மூக்கைத் திருகியபடி, காதைக் கடித்தபடி, கண்ணுக்குள் கண்ணைப் பார்த்தபடி, ''நான் இன்னும் உங்களை நேசிக்கிறேன்'' என்று சொல்லியிருக்கலாம்.

ஒரு சிட்டுக் குருவியாகப் பறந்து திரிந்தாய். நெஞ்சில் தத்தித் தத்தி நடை பயின்றாய். நெஞ்சைப் பிறாண்டினாய். நெஞ்சில் கூடு கட்டினாய். நெஞ்சில் அடைக்கலமாகக் குடி புகுந்தாய். உண்ட களைப்பில், மயக்கத்தில் நெஞ்சில் உறங்கினாய். அப்ப, அப்ப சொல்லியிருக்கலாம்.
இப்ப காலம் போய் விட்டது.

''பாஸ்கரன், நீ ஆரையும் காதலிச்சிருக்கிறாயா?''என்று திடீரெனக் கேட்டான் இவன்.
''ஏன் கேட்கிறாய்?'' இல்லைச் சொல்லன்..''
''நிறைய'' என்று கண் சிமிட்டினான்.''கனபேரைக் காதலிச்சனான்... கனபேரை விட்டனான். கனபேர் என்னை விட்டார்கள். அது ஒரு சும்மா ஒரு அனுபவம்.ஏன் கேட்கிறாய்?''
''இப்ப நான் கதைச்சன் ஒரு பிள்ளை... அவளை நான் காதலிச்சனான்...''
''சீ..அது கலியாணம் முடிச்சிட்டுது போலை...''
''நான் காதலிச்சனான்....அவ்வளவுதான்..''
''என்னடாப்பா சிம்பிளாச் சொல்லுறாய்...''
''அவங்கள் அங்கை போட்டாங்கள்...சைக்கிளை மிதி... போய்ச் சேருவம்


(வரும்)

## மாடு சப்பிய சூரியன்



சூரியனைக் சப்பியது மாடு
வைக்கோலைத் தின்பதைப்போல அதன்.கதிர்களை
மாடு கடித்தது.
நண்பகல் அளவிருக்கும்
அந்தப் பரந்த புல்வெளியில்
சூரியன் விழுந்து கிடந்தது!
எங்கும் இருட்டேதான்!
ஆனால்,காகங்கள் அதன் முளையில்
குந்தி இருந்து கரைந்தன.

முதலில் ஒரு சிறுவன்தான் குதித்தான்!
பின்னர் ஒரு பெட்டையும் விழுந்தாள்!
ஆம், சூரியன் இருந்த ஓட்டையால் ஒருசில
பிள்ளைகள் துள்ளிக் குதித்தன,
விளையாட்டாய்.



புல்வெளி எங்கும் ஏராளங் காகங்கள்.
உலகமே இருண்ட பயத்தில்
அவை அலறியிருக்கலாம்.

இன்னும் குறிவைக்கப்படாத ஓர் இளைய மாடு
ஓடி வந்தது,
சூரியன் கிடந்த இடத்தை நோக்கி.
தலையால் நாலு தட்டுத் தட்டியது,
சூரியனின் முதுகுப் புறத்தில்.
கொம்பால் ஒருதரம் புரட்டிப் போட்டது.
மண் அப்பியபடி கிடந்த சூரியனை
சாணம் அடித்துக்கொண்டே சப்பியது.

ஏராளங் காகங்கள்!
உலகம் இருண்ட பயத்தில்
அவை அலறியிருக்கலாம்.



16.6.93

சோலைக்கிளி

நன்றி - நூலகத்திட்டம்



# "மணிவாசகம்"

சீ.சரத்தனார்

## இலங்கை ''அரசியல கைதிகள்'' இல்லாத நாடு?

இலங்கையில் அரசிலுள்ளவர்களுக்கு எதிரான அரசியல் கோட்பாட்டுடைக் கொண்டுள்ளார்கள் என்பதற்காக எவரும் சிறைப்படுத்தப் படுவதில்லை.
தி ஒப்சேவர் ஆசிரியர் தலையங்கத்தில் - 27.8.93

## சவப்பெட்டிக் கடைக்காரருக்கே இலாபம்

வெளிநாட்டு அமைப்புக்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற இந்த அரசுக்குப் பலம் இல்லை. வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கிற தேவையும் இந்த அரசுக்கு இல்லை. அரசால் தீர்க்கவும் இயலாது. ஸ்ரீ.ல.சு.கட்சியும் இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வரத் தயாரில்லை. இன்று இந்த யுத்தம் சவப்பெட்டிக் கடைக்காரர்களுக்குத் தான் இலாபம் தரும் வியாபாரமாகி விட்டது.
ஐ.ஐ.தே.மு.வின் மாத்தறை மாவட்டப் பிரதம அமைப்பாளரும், தென் மாகாண சபை உறுப்பினருமான திரு.மஹிந்த யாப்பா அபேவர்தன - லங்காதீபவில் 01.09.93

## நற்போதனையால் ஒழியாது!

வட-கிழக்குப் பிரச்சினை மிக உக்கிர நிலையையடைந்துள்ளது. அதனைத் தீர்ப்பதற்கு ஆட்சியாளர்களுக்கு அவசியமேதும் இருப்பதாகத் தெரியவில்லை. எனது நண்பர் திரு.விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்த பின் தெரிவித்தது என்ன? வட-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். வடகிழக்குப் பயங்கரவாதத்தை 'நற்போதனை' செய்து இல்லாதொழிக்க முடியாது. அதனை யுத்தத்தினாலேயே ஒழிக்க வேண்டுமென அவரது இந்தக் கூற்றினால் நான் மிகவும் மகிழ்ச்சிக்குள்ளானேன். இந்தத் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நேர்மையாகச் செயற்பட ஜனாதிபதி விஜேதுங்கா தயார் எனக் கூறியுள்ளார். இதனால் பத்துப்,பதினைந்து வருடங்களுக்குப் பின் எனது மனதில் பெரியதொரு மகிழ்ச்சி உண்டாக்கியுள்ளது.

ஜனாதிபதி விஜேயதுங்காவுக்கு அது தொடர்பான மகிழ்ச்சியைத் தெரிவித்துத் தந்திச் செய்தியொன்று அனுப்பினேன்.
சிங்களப் பாதுகாப்பு சபை தலைவர் காமினி ஜயசூரிய திவயினவில் 01.09.93

## தடுத்தாட்கொண்டேன்!

குறைகள் புறக்கணிக்கப்படும் போது எங்கும் அது எதிர்க்கிளர்ச்சிக்கே வழிவகுக்கும். தென்பகுதி சிங்கள இளைஞர்கள் எதிர்க்கிளர்ச்சி செய்யக் காரணம் என்னவெனில் அவர்களது குறைகள் புறக்கணிக்கப்பட்டமையாகும்.
வடபகுதி இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தக் காரணமாயிருந்ததும் அதுவே. மலையகத் தமிழ் இளைஞர்களின் இழந்த பிர ஜாவுரிமையை வென்றெடுத்ததற்கூடாகவும் அவர்களின் சமூகமுன்னேற்றத்திற்காக உழைத்ததற் கூடாகவும் மலையகத் தமிழ் இளைஞர்களின் எதிர்க்கிளர்ச்சியொன்றைத் தடுத்துதவுவதன் மூலம் நான் நாட்டிற்கு உதவியுள்ளேன்.
அமைச்சர் தொண்டமான் டெய்லி நியூஸில் 01.09.93

## சற்றும் தளராத..

எம்மால் அடுத்த வருடமளவில் தீர்வொன்றைக் காணமுடியும் என நம்புகின்றோம்....அரசியலில் தளரா நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.
பிரதமர் திரு.ரணில் விக்ரமசிங்ஹ - டெய்லி நியூஸில் 02.09.93

## குந்தி இருந்து பேசி

இடைக்கால நிர்வாக சபை ஒரு முதல் உயர்நிலையான நல்ல ஆரம்பப்புள்ளியாகும் என்பதே எனது கருத்து. தமிழ்,முஸ்லீம் குழுக்களும் பிரதான அரசியல் கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் ஒன்றாக அமர்ந்து தமது பிரச்சினைகளைக் கலந்துரையாட உதவும்.
சபாநாயகர் எம்.எச்.முஹம்மது - டெய்லி நியூஸில் - 02.09.93

## இனவாதம் வடகிழக்கில் மட்டுமோ!

இன்று வட-கிழக்கில் 5000 இற்கும் குறைந்த சிலர் இனவாதத்தைக் கிளப்பி யுத்தமொன்றை நடத்துகின்றனர். முழுமக்களும் வட-கிழக்கில் நடத்தப்படும் யுத்தத்திற்கு எதிராகச் செயல் படுகின்றனர்.
உணவு,கூட்டுறவுத்துறை,சனசக்தி அமைச்சர் வீரசிங்ஹ மல்லிமாராச்சி - லங்காதீபதில் 02.09.93

## வேலைநிறுத்தம்

தேவையில்லாமல் வேலைநிறுத்தம் செய்யாதீர்கள். அவ்வாறு செய்தால் அது பெறுமதியற்றதாகிவிடும். வேலைநிறுத்தமொன்று செய்தால் அதனை வெற்றிபெற நினைத்துக் கொண்டே செய்ய வேண்டும். அதைப் போலவே தவறுகள் செய்யாது நாம் ஈடுபாட்டுடன் வேலை செயயப் பழக வேண்டும்.
இ.தொ.கா.தலைவர் - லங்காதீபதில் 02.09.93

## குறிக்கோள் ஆயுதக்களைவே!

வட-கிழக்கிலுள்ள புலிகள் பிரதான அரசியல் நீரோட்டத்திற்கு வருவதற்கு விருப்பமற்றுள்ளனர். எமது குறிக்கோள் புலிகளின் ஆயுதங்களைக் களைவதுதான்.
சக்தி வலுத்துறை அமைச்சர் சந்திர பண்டார- டெய்லி நியூஸில் 02.09.93

## போராடும் பிள்ளைகள்

வட-கிழக்கு என்பது எமது நாட்டின் ஒரு பகுதியாகும். புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுக்கப் போராடும் இராணுவச் சிப்பாய்கள் எமது பிள்ளைகள் ஆவர். இவர்கள் வடக்கில் யுத்தம் புரிகையில்-யுத்தகளத்தில் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கும் போதும் உயிராபத்துக்களுக்கு உள்ளாகும் போதும்,அங்கவீனர்களாகும் போதும் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்கள் எதுவித கணக்கெடுப்பும் இல்லாது உண்டு,குடித்து முழு மனநிறைவுடன் காலத்தைக் கழிக்கின்றனர். வடக்கில் என்ன நடக்கும் என அறிந்து கொள்ளத் தென்பகுதி மக்கள் தற்போதுள்ளதைவிட மிகுந்த கவனமும், அவதானமும், காட்ட வேண்டியது கட்டாயமாகும். அவ்வாறு செய்யாது விட்டால் இந்த நாட்டை நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது கடினமாகும்.
ஆசிரியர் தலையங்கம் - திவயின - 02.09.93

## ஒரு ஆசை

வட-கிழக்குப் பிரச்சினை தேசியப் பிரச்சினையாகையால் அதனை கூடிய விரைவில் தீர்வதைப் பார்க்க நான் ஆசைப்படுகிறேன்.
இலங்கைப் பாராளுமன்றச் சபாநாயகர் எம்.எச்.முஹம்மது - லங்காதீபதில் 02.09.93

## உத்தம பணி

கடந்தவருடம் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ,மேஜர் விமலரத்ன ஆகியோர் கொல்லப்பட்ட பின் புலிகள் பிடித்த பகுதிகளை மீண்டும் பிடிக்க எமது இராணுவத்திற்கு முடியாதுள்ளது. இச்சம்பவத்தின் பின் யுத்தத்தில் பாரிய பின்டைவு ஒன்று நடைபெற்றுள்ளது.
யுத்தத்திற்கு வருடத்திற்கு இருபத்தைந்து மில்லியன் செலவாகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். இந்நிலமையில் நாட்டையும், இனத்தையும் மீட்டெடுக்க மஹாசங்கத்தினர் உத்தம பணியாற்றமுடியும். இந்நாட்டின் ஒருமைப்பாட்டை மதிக்கும் எல்லா அரசியல் கட்சிகளும், பேதங்களை மறந்து நாட்டையும், இனத்தையும் மீட்டெடுக்க ஒன்றிணைந்து பொதுக் கொள்கையொன்றை இனப்பிரச்சினை தொடர்பாக முன்வைத்துச் செயல்படுத்த வேண்டும்.
இனத்தை மீட்டெடுப்பது அன்னத்துக் கட்சிகளதும் பொறுப்பாக வேண்டும் அவ்வாறு இல்லாது போனால் இனம் பிளவு பட்டு ஒருமைப்பட்ட இலங்கைக்குப் பதிலாகப் பிளவுபட்டுச் சென்ற நாடாகிப் போகலாம்.
நான் இதனைச் சொல்வது தேசிய அரசாங்கமொன்றில் நுழைந்து அமைச்சர் பதவியொன்றைப்பெறவல்ல. ஐக்கிய நாடுகளின் இராணுவ ஆட்சிக்கு வட-கிழக்கை உட்படுத்தப் போகிறார்கள். இது மிகவும் பயங்கரமானதாகும்.

## மரியம் ராத்தாவுக்கு நடந்த கதை

மரியம் ராத்தா...!
மரியம் ராத்தா...!
உனக்கு நடந்த கதை
ஊருக்குத் தெரியுதுகா
ஊமையாய்
பரிபாசையில் பேசுவது
காதுகளில்
எப்படியோ
வந்து விழுகுதுகா!

நீதி கேட்டு
கோட்டுக்குப் போனாயாம்
முடிக்கிடந்த காலம் - உன்
பிரச்சினைக்கு
தீர்வு காண
வேங்கைகளின்
தர்பாரை நாடினாயாம்.

நீ மாத்திரம்
சென்றதாக
யார் சொன்னது
நமதூரே...!
''காட்டு''த் தர்பாரிடம்
நீ...!
எம்மாத்திரம்!!

உன்னை வஞ்சிக்க முனைந்த
அந்த
பெரிய மனிதர்களின்
செயலுக்கு
தற்காலிக முற்றுப்புள்ளியாம்
நீயோ......!
முடிந்தது சனியனென்று
சமாதானமடைந்தாயாம்

வந்ததுகா - மீண்டும்
சண்டை
மத்திச்ச மார்களெல்லாம்
காடுபுறம் சாய
வந்ததுகா நம்மபடை..

கருவறுக்கக்
காலம் பார்த்திருந்த
பெரு மனிதர் - உன்
மீது சோடனைகள்
பல போட்டு
அனுப்பி வைத்தனர்கா!

நீதி கேட்டுப் போன - நீ
''டயரோடு''
சங்கமமாகிப் போனதாக
காற்றில் கலந்த
கரும் புகை
சொன்னதுகா!

உன்னாவி
அடிக்கடி வந்து
செல்வதாக - ஒரு
கதைவுலாவுதுகா!


நீ....!
குடியிருந்த
ஓலைக்குடிசை
இருந்த தடம் தெரியலகா - அந்த
பெரிய மனிதர்கள்
கோட்டை கட்ட
ஏற்பாடு நடக்குதுகா!

மரியம் ராத்தா...!
உன்னை நம்பி வாழ்ந்த
கூன் விழுந்து
கண்ணிழந்த
வயோதிபத் தாயாரின்
ஒப்பாரி தொடருதுகா!

நீ...!
மீண்டும் வருவாயென்று
ஏதுமறியா சின்னதுகள்
''ஜில்''லடித்து விளையாடுதுகா..

93.01.18

வாழைமதி



## நடைப் பிணங்கள்

நேற்றிரவு
ஒரு மெல்லிய நிலாவில்-
உறங்கிப் போனேன்.
★
எல்லா உயிர்களும்
மௌனக் குகைக்குள்
மயங்கிக் கிடந்தன.
★
இருட்போர்வை
மிதித்து வரும்
சூர்ய அருட்பார்வைக்காய்
அவர்களின் மோனத் தவம்
நீண்டிருக்கும் .
★
இப்போது ராவுகள் விடிவது
மனித விழிப்பில் அல்லவா..?
★
நிலவும் ஆதவனும்
எரியும் மனங்களுக்கு
ஒன்று தான்.
நட்க்ஷத்திரமென்ன
அதுவும் தீப்பொறிகளாய்
வறுத்தெடுக்கின்றன.
★
யாரைத் தேற்றுவது.
எல்லாமே
நொந்து போன மனங்கள்
வெந்து போன உயிர்கள்
★
மனித மயப்படுத்திய
மன வயல்களில்தான்
ஜீவஹிம்சைகளும்-
அறுவடையாகின்றன.
கண்களை பறிக்கும்
விரல்கள்.
கால்களைத் தறிக்கும்
கரங்கள்
யாரை நம்புவது
யாரிடம் சொல்வது
★
ம்....
இனியென்ன
வாழ்ந்து கொண்டும்
இறந்து கொண்டும்
இந்த ''மனிதம்''
செத்துப் போகும்.

-ஒட்டமாவடி அறபாத்ஸஹ்வி-

## ''கொலரா''

★கிழக்கு வெளுத்துவிட்டது;
அதிகாலை வந்துவிட்டது.

★அதிகாலை அமைதியில்
நடந்து செல்கின்ற வழிப்போக்கர்களின்
காலடி ஓசைகளைக் கேள்..,
புலம்பிக்கொண்டு திரிபவர்களை....,
அவர்களது ஊர்வலத்தை
உற்றுக் கவனி !

★ஒரு மரணம்.....
இரண்டு மரணம்....
...பத்து..இருபது...
..........
அதனைக் கணக்கிட வேண்டாம்


★ விசும்புகின்றவர்களின்
விசும்பலைக் கேள் !
குழந்தைகளின்
அழுகையைக் கேள் !
இறப்பு...இறப்பு..
எண்ணிக்கை தோற்றுவிட்டது !
ஒவ்வொரு வீட்டிலும்
ஒவ்வொரு உயிரற்ற உடல்
படுத்துக் கிடக்கிறது...!
கவலைப்படுகிறவர்கள்
புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்

★அழிவு - அமைதியை
செயலிழக்கச் செய்துவிட்டது!

★இவைகள் தான்
மரணத்தின் கைகள் செய்தவை,
செய்கின்றவை!

★மரணம்...மரணம்...மரணம்...
மனித இனம்
மரணத்தின் செயல்கள் பற்றி
முறையிட்டுக் கொண்டிருக்கிறது.

அரபுமூலம் :நாஸிக்அல்-மலாய்கா
(Nazik Al-Malai-kah)
ஆங்கிலம் வழியாக தமிழில் :
எம்.கே.எம்.ஷகீப்.




## ரோமன் கத்தோலிக்க திருச்சபை யாரை ஏமாற்றுகிறது?

இரணவில பகுதியில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தினால் ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றி அப்பகுதி மக்களுக்கு சரிநிகர் மூலமாக சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

1. ரோமன் திருச்சபையை நம்பினால் இந்த விடயத்தில் அவர்களுக்கு ஏமாற்றமே கிடைக்கும். கிறிஸ்து நாதரின் போதனைகட்கு மாறாக இச்சபை முதலாளித்துவ நாடுகளுடன் நட்புறவு கொண்டுள்ளது. உலகின் மிகப்பெரிய முதலாளித்துவ நாடான அமெரிக்காவுக்கு எதிராக ரோமன் சபை ஏதாவது செய்யுமென்று எதிர்பார்ப்பது மதியீனம். அவ்விதம் செய்வதாக காட்டப்படுவது உண்மையான எதிர்ப்பல்ல. மக்களின் எதிர்ப்பை மழுங்கடிக்க எடுக்கப்படும் தந்திரமே அது. முன்னர் காட்டிய எதிர்ப்பை எந்த அடிப்படையில் இத்திருச்சபை கைவிட்டது? இப்போது காட்டப்படும் எதிர்ப்பு எத்தனை நாளைக்கு நீடிக்கும்?

2. தம்புள்ளை உல்லாச விடுதிக்கான எதிர்ப்பு முயற்சி ஏன் கைவிடப்பட்டது? அந்த விடுதிக்கான கட்டிட வேலையை ஜோன் கீல்ஸ் நிறுவனம் செய்து வருவது இவர்களுக்குத் தெரியாதா? மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் போல் நடிக்க ஒரு எதிர்ப்பு முயற்சி. அதன் பின் அதனைக் கைவிடுதல்.

3. இந்திய ராணுவம் இலங்கைக்கு வந்து எந்தவித ராணுவ நடவடிக்கையிலும் ஈடுபட முன்பு வட-கிழக்குப் பகுதியில் அவர்கள் சுமுகமாக இருந்த போதே அவர்களின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்த தென்னிலங்கை சக்திகளுடன் ரோமன் குருமாரும் இணைந்து கொண்டனர். ஆனால் வட-கிழக்கு மக்களின் விருப்புக்கு மாறாக அங்கு நிறுத்தப்பட்டுள்ள தென்னிலங்கை நிறுவனம் அங்கு செய்யும் அட்டூழியங்கள் தென்பகுதி ரோமன் சபையைப் பொறுத்த மட்டில் சரியானது. இந்த அட்டூழியங்களைக் கண்டிக்க இவர்கள் விரும்புவதில்லை.

இவ்விதமாகத்தான் தென்னிலங்கை ரோமன்சபையின் ''பொதுத்தொண்டு'' அமைந்துள்ளது. மக்கள் விழிப்புணர்ச்சி பெறாத வரை ஏமாற்றும் நடவடிக்கைகள் தொடரவே செய்யும்.

புலிகளின் பிடியிலுள்ள கைதிகளை விடுவிக்கும் முயற்சிகளுக்கு உதவும் ரோமன் சபையினர் தென்னிலங்கையில் கைதாகும் தமிழர்கள் பற்றி ஏன் எதுவும் செய்வதில்லை?

வட-கிழக்கு மக்களை அழிக்கச் செல்லும் ராணுவத்தை கொழும்பு நகரின் பிரதான வழிபாட்டிடத்தில் வைத்து பிஷப் நிக்கலஸ் மார்க்கஸ் ஏன் ஆசீர்வதித்தார்? ஆனால் தேவாலயங்களில் சமாதானத்திற்காக செபிக்கிறார்கள். யாரை ஏமாற்றுகிறார்கள் கடவுளையா - மக்களையா?

கடதாசி இங்கு தட்டுப்பாடு என்பது நீங்கள் அறிந்ததே.

ஜி.இராயப்பன்.
யாழ்ப்பாணம்.

## மறந்திடுதல்

நான் மறந்து போனேன்காண்,
நான் மறந்து போனேன்தான்.

எங்கள் வீதிக்கு
இடப்புறமா வலப்புறமா
தென்னைமரம் இருந்ததென
நான் மறந்துபோனேன்தான்.

எங்களது பொதுக் கிணற்றில்
எத்தனைபேர் பங்குளன -
யார்க்கு வழிவாய்க்காலென
நான் மறந்து போனேன்காண்.

என்வீட்டுக் கோடியிலே
பின்மூலை வளவினிலே
பட்டை வெடித்தபடி
பாலை வடித்தபடி
நின்றமரப் பெயரையும்தான்
நான்மறந்து போனேன்காண்.


இரவிரவாய் மேடையிலே
ராசாவேசம் கட்டிக்
கூத்து நடத்தியவன்
பேர் மறந்தும் போனேன் நான்.

ஊரைவிட்டு இத்தனை நாள்
வெகுதொலைவில் வந்ததனால்
இவைகள் மறந்துவிட்டேன்.

இன்னும்,

எங்களது பெடியள்
துப்பாக்கி தூக்கியது
எதுக்கென்றும் நான் மறந்தேன்.

250692





(இளவாலை விஜயேந்திரனின் வெளிவரவிருக்கும் கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு கவிதை)

## பேச்சும் மூச்சும்

### சுதந்திர பத்திரிகை.

சர்வதேச பத்திரிகையாளர் தினத்தையொட்டி சுதந்திரப் பத்திரிகை இயக்கத்தினர் செப்ரெம்பர் 8ம் திகதி 'தற்போதைய அரசியல் நிலையில் இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் என்ற தலைப்பிலான கருந்தரங்கொன்றை நடாத்தியிருந்தனர்.

தற்போதைய அரசியல் சூழலில் பத்திரிகைச் சுதந்திரம் எவ்வாறு இருக்கிறது என்பதை கருத்தரங்கு வெளிப்படுத்தியதோ என்னவோ, அது தொடர்பாக சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சிடப்பெற்றிருந்த அழைப்பிதழ் கோடிட்டுக் காட்டியது.

போர் என்றால் போர்,சமாதானம் என்றால் சமாதானம் என்று சூளுரைத்த ஜே.ஆர்.காலத்தில் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கினவா அல்லது
நான் உங்களை தம்பி என்று அழைப்பேன் பெரும்பான்மையினத்தவனான என்னை நீங்கள் அண்ணன் என்று அழைக்கலாம் என்று உறவு கொண்டாடிக் கொண்டே தம்பிகளுக்கு வால் காட்டிய பிரேமா காலத்தில் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கினவா அல்லது

பதவியேற்றதிலிருந்து இற்றைவரை 'இங்கு இனப்பிரச்சினையே இல்லை, இருப்பது பயங்கரவாதம் மட்டும் தான்' என்கிற விஜேதுங்க காலத்தில் பத்திரிகைகள் 'சுதந்திரமாக இயங்குகின்றனவா என்று ஆராயவரவில்லை.

ஏனென்றால், இந்த மூவரும் ஆட்சியிலிருந்தவர்கள், இருப்பவர்கள். ஆட்சியையும் அதிகாரத்தையும் பாதுகாப்பது தான் அவர்களது ஒரே இலக்கு.

அவர்கள் படுகொலைகளைத் திட்டமிட்டுவிட்டு 'மக்கள் உணர்ச்சி வசப்பட்டு விட்டார்கள்' எவ்றோ, அதையும் மீறிப் போனால் கண்துடைப்பாக ஒரு விசாரணைக் குழுவையோ நியமிப்பார்கள்.

விமானத்திலிருந்து குண்டுகளைப் பொழிந்து விட்டு பயங்கரவாதிகளைக் கொன்றதாய் லங்காபுவத்தின் மூலம் அறிக்கையிடுவர்.

அல்லது கிளாலியின் ஏதாவது ஒரு கரையில் ஒதுங்கிய ஒருவயது போன பெண்மணியின் சடலத்தை பயங்கரவாதியினது என அறிவிப்பார்.
ஆக அவர்களைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது?
ஆனால், மறுபுறத்தே சுதந்திரப் பத்திரிகை பற்றிப் பேசுகிற பத்திரிகைகள் இது தொடர்பாக எந்தவாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பது முக்கியமான ஒரு வினா?
செப்.2ம் திகதிய திவயினவின் ஆசிரிய தலையங்கத்தில் 'புலிப்பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்கப் போராடும் இராணுவச் சிப்பாய்கள் எமது பிள்ளைகள் ஆவர். இவர்கள் வடகிழக்கில் யுத்தம் புரிகையில் யுத்த களத்தில் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கும் போதும், உயிராபத்துக்களுக்கு உள்ளாகும் போதும் மக்கள் இதுபற்றி அக்கறைப்படாது உண்டு,குடித்து இருப்பதென்பது நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதைக்க வழிகோலிவிடும்' என்று எழுதி அரசு பேரினவாதிகளது சிறுபான்மையினத்தின் மீதான யுத்தத்திற்கு மக்களுடைய ஈடுபாட்டை வற்புறுத்துகிறது.

அன்று வடமராட்சியைக் கைப்பற்ற அரசு அனுமதித்திருந்தால் இன்று பயங்கரவாதிகளிடம் இருந்து நாடே மீட்கப்பட்டிருக்கும் என்று கோட்டை நாக விஹாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் (செப்.03. லங்காதீப) கூறுகிற செய்தியையும்,

'இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணவிட்டால் 2000ம் ஆண்டளவில் முழுச்சிங்கள இனமுமே அழிந்து விடும். என்று ஸ்ரீபாத நிலைய ஹேன்தபான் கொட விமல தேரர் (செப்.02.லங்காதீப)'சிங்கள மக்களை பீதிக்குள்ளாக்கி யுத்தத்திற்கு ஆதரவான மனநிலையை சிங்கள மக்களில் வளர்த்துச் செல்வதை முக்கியம் கொடுத்துப் பிரசுரிக்கிற போது பத்திரிகைகள் யுத்தத்தை ஆதரிகக்கூடாது,

யுத்தத்தை நோக்கி மக்களை வழிப்படுத்தக் கூடாது என்கிற பத்திகைச் சுதந்திரம் தொடர்பான அடிப்படைக் கோட்பாட்டையே கேலிக்குள்ளாக்கி விடுகிறது.

பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்கப் போராடுபவர்கள் தமது பிள்ளைகள் என்று கூறி அரசினது பேரினவாதத்திற்கு முண்டு கொடுக்கிறது. சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டது இதே இராணுவத்தால் தான் என்பதை மூடி மறைத்துவிட முயற்சி செய்கிறது.

கோட்பாட்டு நிலைப்பட்டு அரசின் சிறுபான்மை இனக்குழுக்கள் மீதான பேரினவாதத்தை ஏற்றுக் கொண்டு, அதனை ஊக்குவித்து வளர்த்துக் கொண்டு சுதந்திரப் பத்திரிகைச் சூழலை உருவாக்கி விடலாமென்பது ஒரு கனவு மட்டுமே.

சிறுபான்மையினக் குழுக்கள் மீதான ஒடுக்குமுறையை எப்போது நிராகரிக்கிறார்களோ, இது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல, இனப்பிரச்சினை அதற்கான தீர்வொன்று காணப்படவேண்டுமென்று எப்போது வலியுறுத்துகிறார்களோ, தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்கிற பார்வையை எப்போது விட்டொழிக்கிறார்களோ அதுவரை ''சுதந்திரப் பத்திரிகை'' எதுவும் சாதித்துவிட முடியாதென்பது புரிந்து கொள்ளப்படவேண்டிய ஒரு உண்மை.

## அரபாத்....

இந்த இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையடுத்த காலப்பகுதியில் தமிழ்ப் போராளிக்குள்ளும் ஒப்பந்தத்துக்கு ஆதரவாக, எதிராக எனப் பிளவுகள் ஏற்பட்டன. ஒப்பந்தத்தை ஆதரித்த குழுக்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களது அடிப்படைக் கோரிக்களையே நசித்துவிட இந்திய இலங்கை அரசுகள்.
ஒப்பந்தத்தை ஆதரித்த குழுக்களுக்கான ஆயுத உதவியிலிருந்து கெரில்லா எதிர்ப்பு பயிற்சி வரை அனைத்து உதவிகளையும் வழங்கின. குடிமக்கள் தொண்டர் படை ஆக்கப்பட்டது.
பலஸ்தீன - இஸ்ரேலிய உடன்பாட்டையடுத்து 'பலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் பலஸ்தீனிய தீவிரவாதிகளை எதிர் கொள்ளக்கூடிய விதத்திலான படையொன்றை உருவாக்க பிரிட்டிஷ் உதவும். இந்தப் பயங்கரவாத எதிர்ப்புப் படையினருக்கு இரகசிய ஆலோசனைகளை வழங்கவும் பயிற்சியளிக்கவும் தமது அரசாங்கம் தயாராக இருக்கிறது' என பிரிட்டிஷ் அறிவித்திருப்பதானது, பலஸ்தீனத்திற்குள்ளான மோதலைத் தீவிரப்படுத்துவதனூடாக பலஸ்தீனியரின் தாயகக் கோட்பாட்டையே சிதைத்து விடுகிற நரித்தனமான திட்டத்தைக் கொண்டிருப்பதை புரிந்து கொள்வது அவசியமானது.
ஆக,

இந்த ஒப்பந்தம் ஒரு அமைதிப் பொறியா?

அரபாத் அதற்குள் அகப்பட்டு விட்டாரா?

அவ்வாறானால் பலஸ்தீனியரின் தாயகக் கோட்பாடு என்னவாகப் போகிறது என்பது இப்போதைய முக்கியமான கேள்வி.

## நாலுவார்த்தை....

குணா மனநிலை சரியில்லாதவனாக வருவதன் பின்னணி அழகாகக் காட்டப்படுகிறது. அவனது மனநிலை சரியில்லாதது தொடர்பாக எழுகிற சிக்கல்கள், முரண்பாடுகள் இத் திரைப்படப் பிரதியின் அடி நாதமாக ஒலித்திருந்தால் **குணா** தமிழிலேயே சில சமயங்களில் இந்தியாவிலேயே மிகத் தரமான சினிமா எனும் பெயரைப் பெற்றிருக்கும். சில சமயங்களில் **கமலஹசனது** அற்புதமான நடிப்பாற்றல் வீணடிக்கப்பட்ட உணர்வும் வருகிறது. சாதாரண மனிதருக்கும் மனநிலை சரியில்லாதவனுக்கும் இடையிலான தன்மையை கமலஹசன் அற்புதமாக வெளிப்படுத்தியிருந்தார்.

**குணா** எனும் சினிமாவைத் தயாரிக்க முன்னர் தயாரிப்பாளர், நெறியாளர் செய்திருக்க வேண்டிய வேலை நல்லதொரு திரைப்படப் பிரதியைத் தயாரித்திருக்க வேண்டியது.

இன்னொன்றும் சொல்ல வேண்டும். கமலஹசனது அற்புதமான நடிப்பாற்றல் பல திரைப்படங்களில் வெளித் தெரிந்தது. **அவர்கள், அவள் அப்படித்தான், பதினாறு வயதினிலே, ராஜ பார்வை, மூன்றாம் பிறை, நாயகன், தேவர் மகன். குணாவும் இதில் சேர்த்தி.**

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்



## மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து.....

# இராணுவ மயப்படுத்தப்பட்ட சிவில் நிர்வாகம்

கொழும்பில் இருந்து முதல் நாள் இரவு பிரயாணத்தை ஆரம்பித்தால் ஹபறணை வரை சந்தோசமாக (இட நெருக்கடி இருந்தாலும்) பிரயாணம் செய்து அடுத்த நாள் காலை 5 மணிக்கே ஹபறணையில் இருந்து பிரயாணத்தைத் தொடரும் பயணிகளுக்கு மன்னன்பிட்டி சோதனை நிலையத்தில் இருந்து எல்லாச் சோதனைகளும் ஆரம்பமாகின்றன. மன்னன்பிட்டியில் இருந்து வெலிக்கந்தை, புனானை ஆகிய இடங்களில் காலைத் தேநீரும் இல்லாமல் பட்டினியுடன் சோதனையும் முடித்துக் கொண்டு புறப்பட்டால் ஒட்டமாவடியில் மீண்டும் சோதனை. அதன் ஒவ்வொரு 10 நிமிட ஓட்டத்திற்குப் பின்பு ஒவ்வொரிடமும் சோதனையிடப்பட்டு (வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் பல பெறுமதியான பொருட்களை இச் சோதனை நிலையங்களில் பறி கொடுப்பது வழக்கம்) நண்பகல் 12 மணிக்கு மட்டக்களப்பு நகரத்தை வந்தடையும் போது பிராயாணிகளின் தோற்றமும், கலக்கமும், பெருமூச்சுக்களும் அவர்களை நோயாளிகள் போலவே காட்டும். மன்னன்பிட்டியில் இருந்து (தற்போது வழங்கும் பெயர் மனம்பிடிய) மட்டக்களப்பிற்கு வந்து சேரும் வரை மன்னன்பிட்டி, வெலிக்கந்தை, ஓட்டமாவடி, கும்புறுமூலை, முறக்கொட்டான்சேனை, கொம்மாதுறை, ஏறாவூர், ஊறணி, மட்டக்களப்பு பஸ் டிப்போ, மட்டக்களப்பு நுழைவாயில் ஆகிய இடங்களில் உள்ள சோதனை நிலையங்களில் பயணிகள் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றனர்.



விவசாயத்தையும், மீன்பிடியையும் பிரதான தொழில்களாகக் கொண்ட இம்மாவட்டத்தில் இவ்விரு தொழில்களுமே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதோடு, இத்தொழில்களையே நம்பி வாழ்க்கை நடாத்திய பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று நாளாந்த வாழ்க்கையை நடாத்துவதற்கே கஷ்டப்படுகின்ற நிலைமை நிலவுகிறது. மட்டக்களப்பின் மேற்கே பரந்து காணப்படுகின்ற வயல்நிலங்கள் அனைத்தும் கடந்த பல வருடங்களாக செய்கை பண்ணப்படாமலே உள்ளன. செய்கைக்குள்ளாக்கப்படும் வயல் நிலங்களில் உள்ள பயிர்கள் உரிய காலத்தில் உரம், தண்ணீர் என்பன கிடைக்காத காரணத்தினால் உரிய பலன் தருவதில்லை.

1983ம் ஆண்டு 45 ஆயிரம் ஹெக்டராக இருந்த நெற்செய்கைக் காணிகள் 1992ல் 20 ஆயிரம் ஹெக்டராகக் குறைந்திருப்பதில் இருந்து இம்மாவட்டத்தில் நெற்செய்கை தொடர்பான உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடியும். மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்செய்கைக் கிராமங்கள் அனைத்தும் மாவட்டத்தின் எல்லையோரத்திலேயே பெருமளவில் காணப்படுகின்றன. 14ம், 15ம், 16ம் கொலனிகள் இவ்வாறான கிராமங்களில் சிலவாகும். இக்கிராமங்களில் எல்லாம் 1983ம் ஆண்டுகளில் பெருமளவில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையும் ஏனைய பயிர் செய்கைகளும் தற்போது சிங்கள மக்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு இராணுவம் இப்பகுதிகளில் நிலை கொண்டுள்ளதனால் தமிழ் விவசாயிகள் இப்பகுதிகளுக்குச் செல்லமுடியாமலுள்ளது. இதனால் தமிழர்களுக்குச் சொந்தமான வயல்களில் அவர்களது அனுமதி இல்லாமலேயே சிங்களவர்கள் நெற் செய்கையில் ஈடுபடுகின்ற தன்மை நேர்ந்துள்ளது. மேலும் படிப்படியாக தமிழ் விவசாயிகள் தங்களது வயல் நிலங்களை பறி கொடுக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் எல்லையோரங்களில் தமது முயற்சியால் செய்கை பண்ணப்படும் நெற்பயிர்கள் சரியான விளைவைத் தரும் சமயத்தில் கல்லோயா நீர்த்தேக்கத்தில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் திட்டமிட்டு நிறுத்தப்படுவதன் காரணமாக அல்லது திசை திருப்பப்படுவதன் காரணமாக அப் பயிர்கள் விளைவைத் தாமாகவே இழந்து விடுகின்றன.

மொத்த நெல் உற்பத்தியில் 45 வீதமே மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விநியோகிக்கப்பட மீதி 55 வீதம் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற நிலைமையானது குறிப்பிட்ட காலத்தின் பின் இம்மாவட்ட மக்கள் அதிக விலை கொடுத்தே அரிசியை வாங்க வேண்டிய நிலைக்கும், சில சமயம் வெளிமாவட்டங்களில் இருந்து அரிசியை இங்கு கொண்டு வர வேண்டிய நிலைமைக்கும் உள்ளாகின்றது. அதே சமயம் தமிழ் விவசாயிகள் படுவான்கரை என்னும் பிரதேசத்தில் மேற் கொள்ளப்படும் நெற்செய்கை அறுவடைக்குத் தயாராகும் நிலையில் உள்ள போது அவை புலிகளுக்குச் சொந்தமானவை என்ற காரணம் காட்டி படையினரால் அறுவடை செய்யப்படுவதும் அல்லது தீயிட்டுக் கொழுத்தப்படுவதும் சாதாரணமான ஒன்று. இவ்வளவையும் மீறி இம்மாவட்டத்தில் நெற் செய்கை மேற்கொள்ளப்படும் போது அவற்றுக்குரிய உரவகைகள் இல்லாமையினால் உரிய அறுவடையைப் பெற முடியாத போது நட்டமேற்பட்டதும் தொடர்ந்து அடுத்த நெற் செய்கைப் பருவத்திலும் இதே நிலை ஏற்படும் போது இறுதியில் விவசாயிகள் நெற் செய்கைக்கே முழுக்குப் போட்டு விட்டு வேறு தொழில்களில் ஈடுபடுகின்ற தன்மையும், அத்தொழில்களில் கூட போதிய அறுவடையின்மை காரணமாக எந்த ஒரு தொழிலையுமே நிரந்தரமாகச் செய்ய முடியாமல் அனைத்து வசதிகளையும் இழந்த நிலையில் நகர்ப்புறத்தை நாடி வேலை தேடி வருகின்ற தன்மையும் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள புதியதொரு சூழ்நிலையாகும். இதற்கான தீர்வு மீண்டும் இம் மக்களை விவசாயத்தில் ஈடுபட வைப்பதிலும், தங்கள் சொந்த நிலங்களில் விவசாயத்தை மேற்கொள்ள வைப்பதிலும், உற்பத்திப் பொருள்களுக்கு உரிய பெறுமதியை வழங்குவதிலுமே தங்கியிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் உண்மையில் இராணுவ மயப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. பெயருக்குத்தான் மட்டக்களப்பில் அரச அதிபர் இருக்கின்றாரே தவிர மட்டக்களப்பின் நிர்வாகம் அனைத்தும் இங்குள்ள பிரிகேடியர் றோகான் குணவர்த்தனாவின் கட்டளைப்படியே நடைபெறுகின்றது என்பதே உண்மையாகும். அரசாங்க அதிபர் மோனகுருசாமி எல்லாவற்றிற்கும் தலையாட்டும் பொம்மையாகவே இருக்கின்றார்.

### அழகுராணிப் போட்டி

இவ்வருடத்தில் சித்திரை மாதம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம் பெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டங்களின் போது நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் அழகுராணிப் போட்டியும் நடைபெற வேண்டும் என்பதும் அதற்குரிய அழகுராணியை ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபரும் கொண்டு வரவேண்டும் என்பதும் இவராலும், பிரிகேடியராலும் விடுவிக்கப்பட்ட கட்டளையாகும். இவ்வாறு போட்டியில் கலந்து கொள்ளும் அழகு ராணிகள் கொழும்பிலும் பின்பு இந்தியாவிற்கும் போட்டியிடுவதற்காக அனுப்பி வைக்கப் படுவார்கள் என்றும் பரவலாக அறிவிக்கப்பட்டது. எனினும் அரசாங்க அதிபருக்கும், பிரிகேடியருக்கும் முகத்தில் கரி பூசியாகிவிட்டது. எந்த ஒரு பெண்ணுமே போட்டியில் கலந்து கொள்ள முன்வரவில்லை.

### அதிரடித் திட்டம்

தற்போது இவ்விருவரும் சேர்ந்து மட்டக்களப்பு அபிவிருத்திக்கான 'அதிரடித் திட்டம்' ஒன்றை அமுல் படுத்துகின்றனர். இத் திட்டத்தின் உண்மையான நோக்கம் வெளிப்படையாகவே கூறப்படுகிறது. அதாவது இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளிலேயே அனைத்து கருத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதேயாகும். இதன் மூலம் இராணுவ முகாம் ஒன்று தங்கள் கிராமத்தில் இருந்தால் தங்களுக்கு அதிக வசதிகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை மக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம், இராணுவ முகாம் அமைப்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும், அதனூடாக தங்கள் நோக்கங்களை அடைவதற்குமே அவர்கள் முயற்சிக்கின்றனர்.

அதேவேளை இங்கு செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் புலிகளுக்குச் சார்பானவை என்றே இவர்கள் கருதுகிறார்கள். இதனால் இவ்வாறான நிறுவனங்களின் திட்டங்கள் கூட இராணுவ முகாமைச் சுற்றியும் தாங்கள் சொல்கின்ற கிராமங்களிலும் தான் மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் கட்டளை இட்டுள்ளனர்.

### அவசரமான மீளக் குடியமர்த்தல்

இம் மாவட்டத்தில் 1990ம் ஆண்டின் பின்பு அகதிகளாக ஆக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையும் தற்போது நடைபெறுகின்றது. நல்ல நோக்கோடு செய்யப்பட்டால் இந் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் இங்கு அனைத்து நிலைமைகளும் சுமுகமாக உள்ளது என்று வெளியுலகிற்குக் காட்டுவதற்கும், அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் போது அகதிகள் எவரும் மட்டக்களப்பில் இருக்கக் கூடாது என்பதறகாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவே உள்ளது. ஆனாலும் குடியேற்றப்பட்ட சில இடங்களில் (தளவாய், ஆறுமுகத்தான் குடியிருப்பு, சவுக்கடி) மக்கள் ஓரளவிற்கு நிம்மதியாக உள்ளனர். ஆனால் இராணுவத்தினரும், பொலிஸாரும் நிலை கொண்டுள்ள கட்டிட, வீட்டுச் சொந்தக்காரர்கள் எவருக்குமே இதுவரை எந்தவித நிவாரணமும் வழங்கப்படாததோடு, இவர்கள் எவருமே தங்கள் கிராமத்தில் மீளக் குடியமரவில்லை. அண்மையில் வாகரைப் பகுதியில் தங்களது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த இராணுவத்தினர் பல இடங்களில் நிலை கொண்டுள்ளதோடு வேறு பல விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளனர். வாகரையில் நடாத்தப்பட்டு வந்த அநாதைகள் இல்லத்தில் இருந்து சிறுவர், சிறுமியரை கலைத்துள்ளனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்பது இன்று வரை தெரியாது. கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டு நாவலடி முகாமில் வைக்கப்பட்டிருந்த அகதிகள் அனைவரும் தங்களது சொந்த கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் வீடு, தொழில் என்பன அற்ற நிலையிலேயே இவர்கள் அனைவரும் சொந்தக் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.


## தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கான உதவி

தடுப்புக்கைதிகளின் விடுதலை தொடர்பான இலவச சட்ட உதவியை வழங்கும் திட்டம் ஒன்றை இனங்களுக்கிடையில். நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (மேர்ஜ்) மேற்கொண்டிருக்கிறது.

தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான விபரங்களுடன் கீழ்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளுமாறு அவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் அல்லது நண்பர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**''இலவச சட்ட உதவித்திட்டம்''**
**இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்,**
**இல,18/2,அலோசாலை,**
**கொழும்பு - 03**
**தொலைபேசி இல: 576704**



ரசிகர் அவைக்காக
அரங்காடிகள் வழங்கும்

## இரு நாடகங்கள்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின்

## முயலார் முயல்கிறார்

அ.தாசீசியஸின்

## பொறுத்தது போதும்

1993.09.18 சனி மாலை 6.00மணிக்கு
தெஹிவளை ஜயசிங்க மண்டபத்தில்
நுழைவுச்சீட்டுக்கள் மண்டபவாயிலில்


சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/2 அலோ சாலை ( ாழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்கு மான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்
அச்சுப்பதிவு: 334, காலிவீதி இரத்மலானை நவமக அச்சகம்.